www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 25 | 01 பங்குனி 1996 | விலை: ரூபா 7.00

## தமிழ் மக்களின் கோரிக்கை நியாயமானது
## சிங்கள மக்களும் தீர்வையே நாடுகிறார்கள்
## ஆளும் கட்சி யோசனையை செழுமைப்படுத்துமா?
## எதிர்க் கட்சிகள் இணக்கத்துக்கு வருமா?

# தமிழ்க் கட்சிகள் விடாமுயற்சி

கடந்த சில வாரங்களாக ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட், ஈரோஸ் ஆகிய தமிழ்க் கட்சிகள், அதிகாரப் பகிர்வு விடயங்கள் தொடர்பாக ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி, மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார்கள்.

முக்கியமாக, ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும், வட-கிழக்கு இணைக்கப்பட வேண்டும், அதிகாரங்கள் முழுமையாக பங்கிடப்பட வேண்டும் என்ற விடயங்களை வலியுறுத்தி வருகிறார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக ஒரே குரலில் பேச வேண்டும் என்பதற்காகவும், இதுதொடர்பாக ஒருமித்த கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவும் ஈ.பி.ஆர்.எல்.



எஃப்., ஈ.பி.டி.பி., ரெலோ, புளொட், ஈரோஸ் போன்ற கட்சிகள் ஓர் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது தெரிந்ததே. (இதில் கூட்டணி இணைய விரும்பவில்லை என்பதால், இவர்கள் தவிர்ந்த ஐந்து தமிழ் அமைப்புக்களுமே இக் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.)

அரசு முன்வைத்துள்ள தீர்வு ஆலோசனைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், திருத்தங்கள் தொடர்பாக ஓர் பொதுக் கருத்தை எட்டியுள்ள இத் தமிழ் அமைப்புக்கள், பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இவற்றைத் திருத்துவதற்கான ஒத்துழைப்பை பெறும் பொருட்டு, ஏனைய பாராளுமன்றக் கட்சிகளுடனும் பேசி வருகின்றன.

'இப்பொழுதுள்ள அரசியல் தீர்வு திட்ட நகலே அதிகமானது, ஒற்றையாட்சியை அகற்ற முடியாது, காணி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றில் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன'

என ஐ.தே.கட்சியும், ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளும் கூக்குரலிடும்போது, இவை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று நிறைவேறுமா என்ற கேள்வியும் எழுகின்றது. அத்துடன், தமிழ்க் கட்சிகள் விரும்பியவாறு, அவர்கள் முன்வைக்கும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற கேள்வியும் உள்ளது.


ஆனால், இந்தச் சந்தர்ப்பமும் இழக்கப்படும் பட்சத்தில், ஓர் நீதியான தீர்வுக்கு இன்னும் நீண்ட காலம் எடுக்கலாம். இன்றிருக்கக்கூடிய பூகோள அரசியல் சூழ்நிலையில், தனிநாட்டுக் கோரிக்கை என்பது யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டது என்பதால், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்று அவசியமே. இவ்வடிப்படையில், இப்பொழுதுள்ள அரசியல் நகல் திட்டம் ஒற்றையாட்சி முறையை இல்லாதொழிக்கிறது. அதே சமயம், அதிகாரங்கள் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது. இவ்வகையில் இதற்கு ஆதரவாக சகல சிங்களக் கட்சிகளின் ஆதரவையும் திரட்டுவதும் முக்கியமாகும்.

இடதுசாரிக் கட்சிகளும், ஆளும் கட்சியில் ஒரு பகுதியினரும் எமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கும் அதே வேளை, எதிர்க் கட்சியும், ஆளும் கட்சியினரில் ஒரு பகுதியினரும் எமது கோரிக்கைகளை ஏற்க மறுத்து வருகின்றனர் என்பதும் உண்மையே.

தமிழ்க் கட்சிகளின் ஆதரவிருந்தாலே, எதிர்காலத்தில் தாம் ஆட்சிக்கு வரமுடியும் என்பதை இக்கட்சிகள் உணர்ந்திருக்கின்ற போதிலும்தமிழ்மக்களின் முழுக் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டால்,சிங்களமக்கள் தமக்கெதிராக கிளர்ந்தெழுந்துவிடுவார்கள்என்றும்கூறிவருகின்றன.

ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரை, என்ன விலை கொடுத்தாவது இப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்றே அவர்கள் விரும்புகின்றார்கள்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு திரட்டும் முகமாக சிங்கள முற்போக்கு புத்திஜீவிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் தமிழ்க் கட்சிகள், சர்வதேச ஆதரவை பெறும்பொருட்டு வெளிநாட்டுத் தூதுவர்களுடன் பேசவும் ஏற்பாடுகள்ளைச் செய்து வருகின்றனர். இதன்மூலம், ஐ.தே.க. மற்றும் ஆளும்கட்சி மீது இயன்றளவு அழுத்தத்தை ஏற்படுத்தவும் முயற்சித்து வருகின்றனர்.இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளுக்காக உரக்க குரல் கொடுப்பதன் மூலமே அரசாங்கத்திற்கு உண்மையான அழுத்தத்தை நாம் கொடுக்கமுடியும். எனவே, தமிழ் மக்களும் இவற்றுக்கான முன்



முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலமே, நாம் ஓர் முழுமையான தீர்வை நோக்கி நகர முடியும்.

உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...

முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கை .................... 03
புலிகளைத் திருப்திப்படுத்த முடியுமா? - விதுரன் கட்டுரை ....04
வட கிழக்கு இணைப்பை வற்புறுத்துவது ஏன்? - பதில்கள் .... 06
அதிகாரப் பகிர்வு ஓர் கண்ணோட்டம் ........................ 07
எந்த நாட்டிலும் அனுபவிக்காத அவலம் சொந்த நாட்டில்.... 08
புகலிடத் துரோகம் - ஜெர்மனியிலிருந்து சாரதி ............ 10
மக்கள் நம்பிக்கை கொள்ள என்னதான் இருக்கிறது? ......... 12

உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...உள்ளே...

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## புலி உறுப்பினர்கள் சிந்திப்பார்களா?

சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான தமிழின விரோத நடவடிக்கைகளும், இனப் படுகொலைகளும், சர்வதேச ரீதியில் இலங்கைக்கு, ஓர் கெட்டபெயரை ஏற்படுத்தி வந்தது. ஆனால் திருமதி சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயகா அவர்கள் பதவிக்கு வந்த பின்னர், சர்வதேச ஆதரவை தனது பக்கம் திரட்ட அயராது முயற்சி செய்தார். ஆரம்பத்தில் இருந்து அரசியல் தீர்வை வலியுறுத்திய ஜனாதி பதி என்பதாலும், புலிகளுடன் நிபந்தனைகள் அற்ற விதத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததாலும், மற்றைய ஜனாதிபதிகளைவிட உண்மையாகவே இனப்பிரச்சி னையை தீர்க்கக்கூடிய ஜனாதிபதி என்ற நம்பிக்கையையும் அவர் சர்வதேச ரீதியில் உருவாக்கினார்.

ஆனால் அதேசமயம், புலிகள் திடீரென பேச்சுவார்த்தையை குழப்பியது மாத்திர மல்லாமல் அன்றிரவே சிறிலங்கா அரசுக்கு எதிரான யுத்தத்தையும் ஆரம்பித்தார்கள். இதனை சர்வதேச சமூகமும் எதிர்த்தது. ஏற்கனவே இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியை கொலை செய்ததன் மூலம் சர்வதேசப் பயங்கரவாதிகள் என்ற முத்திரையை பதித்துக்கொண்ட புலிகள், முஸ்லீம், சிங்கள மக்களை படுகொலை செய்வதன் மூலமும், பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதன் மூலமும் இன்னுமின்னும் தம்மை சர்வதேச சமூகத்திடமிருந்து அந்நியப்படுத்திக் கொண்டார்கள் என்பதே உண்மை. பேச்சுவார்த்தைக்கு அழைப்பதும், பின்னர் அதனைக் குழப்புவதும், அவர்கள் மீதான பலத்த நம்பிக்கையீனங்களை உருவாக்கி இருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர், இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றுடன் இவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையை குழப்பினார்கள், பின்னர் இந்திய அமைதிப்படையுடனான யுத்த காலத்தில் கிட்டு பல மாதங்களாக இந்திய உளவுப் பிரிவான 'றோ'வுடன் பேச்சுவார்த்தையை நடாத்தி, குழப்பினார்கள், அதன் பின் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நீண்ட பேச்சுவார்த்தையை நடாத்திக் குழப்பினார்கள். இறுதியில் சந்திரிகாவுடனும் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்து முறித்துக் கொண்டார்கள். இவற்றை முறித்தபோது சொல்ல புலிகளுக்கு எவ்வளவுதான் காரணங்கள் இருந்தபொழுதிலும் கூட, அக்காரணங்களை தமிழ் மக்களோ அல்லது சர்வதேச சமூகமோ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. எனவே புலிகளின் வரலாற்றில் பேச்சுவார்த்தை என்ற விடயங்கள் அவர்களின் தந்திரோபாயங்கள் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டதாகவே பரவலாக சகலரும் நம்புகின்றார்கள்.

இவை ஒருபுறமிருக்க, புலிகள் தமது இராணுவ பலத்தின் மீது கொண்ட நம்பிக்கையாலேயே இப்பேச்சுவார்த்தைகளை, இடைக்கிடை தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கான அவகாசமாக கருதி ஈடுபட்டு வந்தார்கள். இந்த அடிப்படை யில்தான் ஜனாதிபதி சந்திரிகா அவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையும் கூட இவர்களால் நடாத்தப்பட்டது. தமது இராணுவ பலத்தின் மீது கொண்ட அதீத நம்பிக்கை மாத்திரமல்லாமல், மக்களையும், தமது இராணுவ பலத்தின் மேல் நம்பிக்கை கொள்ளக் கூடிய மாயைகளையும் இவர்கள் உருவாக்கி வந்தார்கள். ஆனால், 'றிவிரச' இராணுவ நடவடிக்கையின் மூலம் இவர்கள் யாழ்ப்பாணத்தை இழந்ததானது, இவர்களது பலவீனத்தை வெளிச்சமிட்டுக் காட்டியது. இவர்களது இராணுவ நடவடிக்கை மேல் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் தவிடுபொடியாக் கப்பட்டது. சிறிலங்கா இராணுவத்தின் "றிவிரச" நடவடிக்கையை திசை திருப்பு வதற்காக இவர்கள் மேற்கொண்ட, சிங்கள கிராமவாசிகள் மீதான தாக்குதல்கள், இவர்களை பயங்கரவாதிகள் என்று மேலும் மேலும் முத்திரை குத்திக்கொள்ள உதவியதே தவிர, இவர்களுக்கு எந்தவிதத்திலும் சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொடுக்கவில்லை. விழுத்தும் மீசையில் மண் படவில்லை என்ற பாணியில் அமைந்த வீரவசனங்கள் யாவும், மக்களால் கேலிக்குரியதாகவே பார்க்கப்பட்டது.

இவற்றை மறைக்கவும், தமது இராணுவ பலத்தை வெளிப்படுத்தவும், கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள். இதில் ஒன்றே கொழும்பு மத்திய வங்கியின் மீதான குண்டுத் தாக்குதலாகும். இதிலும் கூட 87இற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள், சிங்கள, தமிழ், முஸ்லீம் வேறுபாடின்றி கொல்லப்பட்டதும், 1500 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததும், மீண்டும் இன்னொருமுறை இவர் களை பயங்கரவாதிகளாகவே இனங்காட்டியுள்ளது.

இவற்றுக்கு அப்பால் அண்மையில் முல்லைத்தீவு கடலில் இவர்களுக்கு ஆயுதம் ஏற்றிவந்த கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும், இவர்களுக்கு நிச்சயமாக பின்னடைவையே ஏற்படுத்தி இருக்கும். இதுவரை இவ்வாறான 3 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டும், கைப்பற்றப்பட்டுமுள்ளன. இதன் மூலம் எதிர்காலத்தில் கப்பல் மூலம் ஆயுதங்கள் கொண்டுவருவது என்பதும் கேள்விக்குரியதாகவே மாற்றப்பட்டுள்ளது.

அதேசமயம் வலிகாமத்தில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட மக்கள், தமது இருப்பிடங்களுக்கு செல்ல ஆவலாய் இருக்கின்றார்கள். புலிகளிடம் தப்பி வவுனியா வருவோர் ஆகாய மார்க்கமாக யாழ்நகர் கொண்டு செல்லப்படுகின்றனர். அதுமட்டுமின்றி, வடமராட்சி, தென்மராட்சியில் இருக்கும் வலிகாமத்து மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப ஏதுவாக, இன்னொரு தாக்குதலுக்கும் இராணுவம் திட்டமிட்டு வருவதாக நம்பகமாக அறியப்படுகின்றது. மக்கள் இன்றிருக்கும் மனோநிலையில், அவர்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்புவார்களேயன்றி, வன்னிக்கு ஓடக்கூடிய சூழ்நிலை இல்லை. இந்நிலையில் புலிகள் மேலும் பலவீனமாகிப் போகும் சந்தர்ப்பங்களே அதிகரித்து வருகின்றன.

புலிகளின் தவறான கொள்கைகளும், சிந்தனையற்ற செயற்பாடுகளும், புலிகளை மாத்திரமல்லாமல், தமிழ் மக்களின் நியாயமான போராட்டங்களையே பலவீனப் படுத்தியுள்ளது. இந்திய இராணுவத்துடனான அர்த்தமற்ற போரும் ராஜீவ்காந்தி கொலையும், இயக்கங்களை தடைசெய்ததும், முஸ்லீம்களை விரட்டியது போன்ற நடவடிக்கைகள் யாவும் எமது போராட்டத்தை பலவீனப்படுத்தியே வந்துள்ளது. தமது இராணுவ பலத்தில் நம்பிக்கை கொண்டு இப்படியான தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், இன்று தாமும் பலவீனப்பட்டு, போராட்டத்தையும் நாசமாக்கி உள்ளார்கள்.

எனவே இந்த இறுதிக் கட்டத்திலாவது, புலிகள் தமது குறுகிய நலன்களை கைவிட்டு, தமிழ் மக்களின் பரந்த நலனில் அக்கறை கொண்டு ஓர் உறுதியான பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும். புலிகள் பல இராணுவ சாகசங்களைப் புரிந்துள்ளார்கள். அதையாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் வெறும் இராணுவ சாகசங்கள் மட்டும் பிரச்சினையைத் தீர்க்காது என்பதை இப்பொழுதாவது உணர்ந்து கொள்ள வேண்டும். புலிகளின் நடவடிக்கைகள் விடுதலைக்கு உரமூட்டுவது என்பதற்கு மாறாக, அதனை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்பதை அவர்கள் உணரவேண்டும். இது இனியும் நீடிப்பதானது, 50,000இற்கு மேற்பட்ட மக்கள் செத்து, கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டு, 13 வருடங்களுக்கு மேலாக நடந்துவரும் போராட்டத்தால் தமிழ் மக்கள் எந்த நலனையும் பெற்றுக்கொள்ளவில்லை என்ற சூழ்நிலையையே உருவாக்கும். புலிகளின் ஒவ்வொரு உறுப்பினரும் இதனைக் கொஞ்சம் ஆழமாக சிந்திப்பார்களா?

# உளறு வாயன்



துருக்கிய கொடுங்கோலாட்சிக்கு எதிராகப் பேசிய கவிஞனொருவன் இப்பிடிச் சொல்கிறான்:

"மௌனம் சாவு.
எதுவுமே பேசாமல் இருப்பதும்
சாவுதான்.
எதுவும் பேசினாலும் சாவு நிச்சயம்.
பேசுவோம்
பேசிவிட்டுச் சாவோம்."

பேசவிடாமல் சாகடிக்கிற கூத்து அந்தக் காலந்தொட்டு இருந்து வருகுதெண்டு தான் தெரியுது. ஆனால், எதுவும் பேசாமலிருக்கிறதெண்டாலும் அது செத்த மாதிரித்தான் எண்டு என்னைப் போலை ஆக்களின்ரை நிலைமையை விளங்கிச் சொல்லிப் போட்டுப் போயிருக்கிறான் பாருங்கோ.... அடடா... அருமை! அருமை!

எங்கடை மாவீரரவையின்ர துவக்கு றேஞ்சுக்கு அங்கால தள்ளி நிண்டு கொண்டு தான் சுதந்திரமாய் வாய்திறக்கலாம். மீறிக் கதைக்கிறவர்கள் மண்டையில போடப்படுறதை இயல்பாய் ஏற்றுக்கொண்டிருக்கிறது எங்கடை வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவுகளிலை ஒண்டு. ஆனபடியால், கொஞ்சம் வாயைத் திறந்து கதைக்கிறவையைக் கண்டால், வாழ்த்துப் பாடலாம் எண்டளவுக்கு வாஞ்சை பொங்குது.

கிளாலி கடந்து, வவுனியாவுக்குள்ளாலையும் தப்பி வந்துசேர்ந்த பெரிசொண்டிட்டை வாயைக் கிளறிப் பாத்தன். வலுசந்தோசம்.

பேந்தென்னவாம்! எங்கடை சனம் துவக்குகளை எதிர்த்துப் பேசவும், திட்டவும், கல்லெறியவும் வெளிக்கிட்டிருக்குதெண்டது நல்ல மாற்றம்தானே? பெரிசு சொன்ன புதினங்களைப் பற்றியெல்லாம் பிறகொரு நேரம் ஆறுதலாய்க் கதைக்க வேணும். இப்ப 'கறன்ற் பொலிற்றிக்ஸ்'.

தமிழீழத் தாகம் கொண்டவைக்கு விடாய் அடங்கிறதாயில்லை எண்டது ஒருபக்கமிருக்க, 'தீர்வெங்கை தீர்வெங்கை' எண்டு தீர்வுத் தாகம் எடுத்திருந்தவைக்கு தாகம் அடங்கத் தண்ணி காட்டியாச்சு. ஓம், அரசாங்கம் தனது தீர்வு யோசனையளை வைச்சிட்டுது. ஆனால், அரசு 'தண்ணி காட்டி'விட்டதாகவே - புலியையும் போரையும் எதிர்க்கிற, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளை தீர்வு காணலாம் எண்டு நம்பி வந்திருக்கிற தமிழ்க் கட்சியள் நினைக்கினம்.

ஜனாதிபதியோ, 'தமிழ் மக்களுக்காக நான் வைச்சிருக்கிற தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதுதானே தமிழ்க் கட்சியளின்ரை கடமை' எண்டு நினைக்கிற மாதிரித் தெரியுது. 'புலியளின்ரை எதேச்சாதிகாரம் ஒழிக்கப் படோணும் எண்டதுதானே மற்றத் தமிழ்க் கட்சியளின்ரை பிரச்சினை. என்ரை அரசாங்கம்தான் புலிகளின் காலை முறிச்சிருக்கு. இனி, நான் வைச்சிருக்கிற தீர்வை பேசாமல் மற்றவை வாங்கிக் கொள்ள வேண்டியதுதானே' எண்டும் அவர் நினைக்கிற மாதிரித் தெரியுது. கல்யாணச் சந்தடியிலை தாலிகட்ட மறந்து போறதெண்டுறது இதைத்தான்.

புலியள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க விடாமல் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்; மற்றத் தமிழ்க் கட்சியள் புலியளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களிட்டை - அதாவது பெரும்பான்மைத் தமிழ் மக்களிட்டை - போறதுக்குக் கூட ஏலாத நிலையிலிருக்கின்றன; இதுக்கு முந்தி இருந்த எந்த அரசாங்கமும் செய்ய நினைச்சிருக்காத ஒரு வேலையாய் தீர்வுத்திட்ட யோசனைகளை முன்வைச்சிருக்கு இந்த அரசாங்கம் எண்டதெல்லாம் உண்மை தான். ஆனால், தமிழ் மக்களின்ரை குறைஞ்சபட்சமான அபிலாசைகளைக் கூடப் பூர்த்தியாக்காத ஒரு தீர்வை வைச்சிட்டு, இனப்பிரச்சினையைத் தீர்த்துப் போடலாம் எண்டு ஆரும் நம்பேலாது.

சரியாய்ச் சொல்லுறதெண்டால், புலியளை அடக்கிறது மட்டும் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைச்சதாகி விடாது. மாறாக, சரியான முறையில் வைக்கப்படும் அதிகாரப் பகிர்வுத் திட்டம்தான் புலியளை இல்லாமல் செய்யும்; இனப்பிரச்சினைக்கு தீர்வை கொண்டுவரும்.

மற்றத் தமிழ்க் கட்சியள் தண்ணிக் கொண்டு தவிட்டுக்கொண்டெண்டு இழுத்துக் கொண்டிராமல், இந்த நேரத்திலை ஒண்டாய்க் கதைக்க வெளிக்கிட்டிருக்கிறது நல்ல சகுனம். அஞ்சு விரலும் ஒண்டாய் சேர்ந்தால்தானே சின்னத் துரும்பையெண்டாலும் எடுத்துப் போட ஏலுமாயிருக்கும்.

தொடர்ந்தும் சனங்களைச் சவக்கிடங்குகளுக்கு இழுத்துப் போய்க்கொண்டிருக்கிறதை நிப்பாட்ட, கொஞ்சமாவது யதார்த்தத்தை விளங்கி யோசிக்கிறவை எல்லாம் இந்தப் பக்கம் ஒண்டாய் நிண்டு இழுத்தால்தான் அழிவைத் தடுக்கேலும். ஏதோ என்ரை புத்திக்கு வெளிச்சதைச் சொன்னன். கொள்ளுறதும் தள்ளுறதும் அவையவை பாடு.

எங்கடை ஆக்களுக்கு புறநானூற்று வீரத்தையும், 'தனியே நமக்கொரு குணமுண்டு' எண்ட ரைப்பில நாலு வசனமும் சொல்லி ஏத்திவிட்டால் போதும் உணர்ச்சிவசப்பட்டு தலைகால்

தொடர்ச்சி.... பக். 4


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, சிவிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.


படிப்பகம்

www.padippakam.com



# முஸ்லீம் மாகாண சபைக் கோரிக்கை தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கையை வலுவிழக்கச் செய்யுமே தவிர நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல

புலிகளின் குண்டுத் தாக்குதல்கள் ஒரு புறமும் அரசின் யுத்தம் இன்னொரு புறமுமாக நடந்தாலும் கூட, அரசாங்கம் தனது அரசியல் தீர்வு தொடர்பாகவும் தொடர்ந்து பேசி வருகின்றது. இவ்வரசியல் தீர்வில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டி இருக்கின்றது என்பதையும், வட–கிழக்கு இணைந்த ஒரே அதிகார அலகு அமைய வேண்டும் என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் இவை தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவே இறுதி முடிவெடுக்க வேண்டுமென அரசு கூறிவருகின்றது.

இதில் அதிகாரப்பகிர்வை விடுத்து, அதற்கான அலகு என்ற விடயத்தை எடுத்துப் பார்ப்போமாயின், முதலாவதாக சிங்கள தீவிர வாதப் போக்குடையோரும், அரசும் இதனை எதிர்த்து வருகின்றனர். இவை தவிர முஸ்லீம் மக்களுக்கு ஓர் மாகாணம் தேவை என்ற கருத்தும் முஸ்லீம் காங்கிரசால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

சிங்களத் தீவிரவாதிகள் மற்றும் அரசைப் பொறுத்தவரை, வட–கிழக்கு இணைந்த ஓர் பிரதேசம் அதிகார அலகாக இருக்கும் பட்சத்தில், அது தனிநாட்டுக்கான ஓர் தளமாக அமைந்துவிடும் என்று கூறப்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வந்த சிங்கள இனவாதக் கருத்துக்களாலேயே இப் பயப்பிராந்தி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவர்களது பிரதிநிதித்துவங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு, அவர்களது தனித்துவமே அழிந்துபோகும் நிலையில்தான் தனி நாட்டுக்கான கோஷம் வலுப்பெற்று வந்தது. எனவே இவை தீர்க்கப்படும் பட்சத்தில் தனி நாட்டுக்கான தேவை இல்லாமல் போய்விடும் என்பதுதான் உண்மை.

ஆனால் இவற்றை சரியான முறையில் புரிந்துகொள்ளாமல் வட–கிழக்கு இணைந்த அலகு கொடுக்கப்பட்டால், அது தனிநாட்டுக்கான அத்திவாரமாகப் போய்விடும் என ஒரே பல்லவியையே இவர்கள் பாடி வருகின்றார்கள்.

1987 ஒப்பந்தத்தை தொடர்ந்து 1989இல் உருவாக்கப்பட்ட வட–கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவையில், வட–கிழக்கில் உள்ள சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதற்காக, தமிழ், சிங்கள, முஸ்லீம் அமைச்சர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். ஐந்து அமைச்சர்களில் ஒரு முஸ்லீமும், ஒரு சிங்களவரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

எனவே, வட–கிழக்கு மாகாணசபை என்பது சாராம்சத்தில் தமிழ் உறுப்பினர்களை பெரும்பான்மையாக கொண்ட சபையாக இருந்தபொழுதிலும் கூட, அது வட கிழக்கில் வாழக்கூடிய பல்லினங்களையும் கொண்ட ஓர் சபையாகவே இருக்க முடியும். இப்படி பல்லினங்களையும் கொண்ட ஓர் சபையால் தனிநாடொன்றை உருவாக்குவது இயலாத காரியமாகும். ஏனெனில் இதற்கு அம்மாகாண சபையிலேயே பலத்த எதிர்ப்புகள் இருக்கும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மாகாணசபையை நடத்தியபொழுது தனிநாட்டைப் பிரகடனப்படுத்தியதுதானே என யாராவது கூறுவார்களாயின், அவர்கள் மாகாணசபையின் அப் பிரகடனத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும். (இது தொடர்பாக, எமது மாசி மாத –வெளியீடு 24– புதிய கண்ணோட்டத்தில் றோகான் எதிரிசிங்கவின் கட்டுரையினையும் பார்க்கலாம்)

முதலாவதாக, அது ஓர் தனிநாட்டுப் பிரகடனமல்ல. மத்திய அரசு மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்களை கொடுக்காமல் அதனை சீர்குலைத்து, புலிகள் மூலம் மாகாண நிர்வாகத்தைச் சின்னாபின்னப்படுத்த நடவடிக்கை எடுத்ததன் பின்னரே ஈ.பி.ஆர். எல்.எப். மாகாணஅரசானது மத்திய அரசுக்கு 19 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து, அதனை நடைமுறைப்படுத்த ஒருவருடகால அவகாசமும் கொடுத்தது. ஒரு வருடத்துள் அந்த 19 அம்சக் கோரிக்கையும் நிறைவேற்றாத பட்சத்தில் தனிநாடு பிரகடனப்படுத்தப்படும் எனவே கூறப்பட்டது.

இது உண்மையில்அதிகாரங்களை வழங்க மறுத்த அரசுக்கு, மறுக்கும் பட்சத்தில் இப்படியான நெருக்கடிகள் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டவே அவ்வாறான பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மாறாக, அரசு முழு அதிகாரங்களையும் வழங்கும் பட்சத்தில் அவ்வாறான ஓர் சூழ்நிலை தோன்றி இருக்காது. அதுகூட முஸ்லீம், சிங்கள அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் நடந்த ஓர் விடயமுமல்ல. ஆகவேதான் கூறுகின்றோம் ஓர் பல்லின பிரதிநிதித்துவம் கொண்ட சபையில் தனிநாட்டுப் பிரகடனங்களை நிறைவேற்றுவது மிகவும் சிரமமான காரியமாகும்,

இவை பிரிக்கப்பட்டு வடக்கு தனியாக, கிழக்கு தனியான மாகாணசபைகளாக உருவாகும் பட்சத்தில் அரசின் பயத்திற்கு ஓர் அர்த்தம் இருக்கலாம்.

ஏனெனில், வடக்கு மாகாணம் 97சதவிகித தமிழ் மக்களைக் கொண்ட பிரதேசமாகும். இது வெறும் தமிழ் பிரதிநிதிகளை மாத்திரமே உள்ளடக்கும் பட்சத்தில் (ஒருசில முஸ்லீம் பிரதிநிதிகளைத் தவிர) இவர்கள் தனிநாட்டு பிரகடனம் ஒன்றை செய்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகும். இக் கருத்துக்களை அரசோ, சிங்கள இனவாதக் குழுக்களோ கவனத்திலெடுக்காமல், கூக்குரலிடுகின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

இவை ஒருபுறமிருக்க, சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தை தளமாகக் கொண்டு (அம்பாறைத் தேர்தல் தொகுதி தவிர்ந்த) மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய பிரதேசங்களில் இருக்கக் கூடிய முஸ்லீம் மக்களைக் கொண்ட ஓர் முஸ்லீம் மாகாண சபை வேண்டுமெனக் கோருகின்றது.

முஸ்லீம் காங்கிரசின் இக் கோரிக்கையானது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை வலுவிழக்கச் செய்யும் ஓர் கோரிக்கையே தவிர, இது நடைமுறைச்சாத்தியமான கோரிக்கையல்ல. இதற்குப் பல காரணங்கள் உண்டு:

1. இன்று அகதிகளாக புலிகளால் விரட்டப்பட்ட வடமாகாண முஸ்லீம் மக்கள் இக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

2. முஸ்லீம் காங்கிரஸ் குறிப்பிடும் 'அம்பாறையை தளமாக கொண்ட' என்ற பிரதேசமான கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் பிரதேசமும் கூட முஸ்லீம் மக்கள் தொடர்ச்சியாக வாழும் பிரதேசமல்ல. முக்கியமாக, அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் வரையில் வரக்கூடிய நீண்ட பிரதேசம் முழுமையாக ஓர் தமிழ் பிரதேசமாகவே உள்ளது. கல்முனை, காரைதீவும் கூட தமிழ் ஏ.ஜி.ஏ. பகுதிகளை உள்ளடக்கிய நிலப்பிரதேசமாகவே உள்ளது.

எனவே இங்கு முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்களே தவிர, அவர்கள் தளமாக்க விரும்பும் பிரதேசத்தில் அவர்கள் தொடர்ச்சியான ஓர் நிலப்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. ஏனைய வட–கிழக்கு பிரதேசங்களில் இருக்கக்கூடிய முஸ்லீம் பெரும்பான்மை பிரதேசங்களை அம்பாறையுடன் இணைக்க, முஸ்லீம் காங்கிரஸ் கோருமாயின், அம்பாறையில் உள்ள தமிழ் பிரதேசங்களை இணைக்கும்படி தமிழ் மக்களும் கோரலாம். அப்படியாயின், முஸ்லீம் காங்கிரஸ் கூறும் தளம் என்ற பிரதேசமே இல்லாமல் போய்விடும்.

3. மன்னார், திருமலை, மட்டுநகரில் இருக்கும் முஸ்லீம் பிரதேசங்களை அடக்கிய, அதாவது தொடர்ச்சியற்ற இந் நிலப்பரப்புக்களை ஒரே அலகுக்குள் கொண்டு வருவது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது? அப்படி ஏற்படுத்தப்பட்டால், அதற்கான நிர்வாகத்தில் குளறுபடிகள் ஏற்பட நிறைய வாய்ப்புண்டு. எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ற கேள்வியும் உண்டு. இப்படியான ஓர் அலகை அரசோ அல்லது இவ்விடயங்களை விளங்கிக் கொண்ட எவருமோ ஏற்றுக்கொள்ள முடியாது.

4. மேற்கண்டவை நடைமுறைச் சாத்தியமில்லாத பட்சத்தில், அம்பாறையில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் அதை தனி மாகாணம் ஆக்கும்படி முஸ்லீம் காங்கிரஸ் கோரலாம். அப்படியாயின் ஏனைய வட–கிழக்கு பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்துதானே வாழ வேண்டும்? ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ்–முஸ்லீம் மக்கள் ஐக்கியப்பட்டு வாழமுடியுமாயின் அம்பாறைக்கு மாத்திரம் ஏன் ஓர் தனி மாகாணசபை என்ற கேள்வி எழுகின்றது. அவர்களும்கூட தமிழ் மக்களுடன் ஐக்கியப்பட்டு வாழலாம்தானே என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இந்நிலையில் முஸ்லீம் காங்கிரஸின் தனி மாகாணக் கோரிக்கை எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதை முஸ்லீம் மக்கள் ஆழமாக ஆராயவேண்டும்.

உண்மையில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையில் ஏற்பட்ட பிளவென்பது ஐ.தே.க. அரசாங்கத்தால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஓர் விடயமாகும். 1985 வரையில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையில் பிளவுகளோ கசப்புணர்வுகளோ என்றும் இருந்ததில்லை. ஆனால் ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைப்பதற்காக, அரசு திட்டமிட்ட சதி முயற்சிகளே தமிழ்–முஸ்லீம் மக்களிடையில் குரோத உணர்வுகளை தோற்றுவித்தது.

ஜிகாத் என்றும் வேறுபல பெயர்களிலும் தமிழ் மக்களுக்கெதிரான ஆயுதக் குழுக்கள் அரசால் உருவாக்கப்பட்டன. இவர்களுக்கும் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சமர்கள் தமிழ்–முஸ்லீம் மக்களிடையே குரோத உணர்வுகளை வளர்த்தன. இதனால் தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் அநியாயத்திற்கு கொல்லப்பட்டனர். புலிகளின் கண்மூடித்தனமான கொள்ளைகளும், கொலைகளும் இன்னும் முஸ்லீம்–தமிழ் உறவில் விரிசலை உருவாக்கின.

ஆனால் சாதாரணமான ஜனநாயகச் சூழ்நிலையில் இவை தோன்றுவதற்கு எக்காரணமும் இல்லை என்பதே உண்மை. முஸ்லீம் காங்கிரஸ், தன்னை முஸ்லீம் மக்களின் ஏகப்பிரதிநிதியாக காட்ட வேண்டும் என்பதற்காக முஸ்லீம் உணர்வுகளை தூண்டிவிட்டது. இவ் உணர்வுகளுக்கு தீனி போட வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்டதே முஸ்லீம் மாகாணம் என்ற கோரிக்கையாகும்.

எவ்வாறு தமிழ் இனத் துவேசத்தை உருவாக்கி சிங்கள அரசியல்வாதிகள்அதில் குளிர்காய்கின்றார்களோ, அவ்வாறான ஓர் போக்கையே முஸ்லீம் காங்கிரசும் கடைப்பிடித்து வருகின்றது.

இன்று இலங்கையில் வாழக்கூடிய முழு முஸ்லீம் மக்களின் தலைவராக தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டுள்ள அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, தனது அரசியல் இருப்பை பாதுகாத்துக் கொள்ள, பெரும்பான்மைக் கட்சிகளுடன் பேரம் பேச முஸ்லீம் இன உணர்வுகளை பாவித்து வருகின்றார் என்பதே அப்பட்டமான உண்மையாகும்.

ஆனால் அவரின் இந்நடவடிக்கையானது நீண்டகாலத்தில் முஸ்லீம் மக்களைத்தான் பாதிக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாத்திரமல்லாமல் முஸ்லீம் காங்கிரஸின் இக் கோரிக்கைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் சீர்குலைக்கும் என்பதையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேசமயம் தமிழ் தலைமைத்துவங்களும் முஸ்லீம் மக்களுடைய பிரச்சினைகள் கோரிக்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுக்கும் பல பிரச்சினைகள் உண்டென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் மதம், கலை கலாச்சாரம் போன்றவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை பேண, அவர்களது சமூகத்தை முன்னேற்ற, அவர்களது மதம் கலை கலாச்சாரத்தை வளர்க்கும் விதத்தில் அதற்கான நிறுவன வடிவங்கள் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் கட்சிகள் இவற்றுக்கான சரியான செயற்திட்டங்களை வெளியிட வேண்டும். இவற்றின் மூலமே முஸ்லீம்–தமிழ் ஐக்கியத்தை வளர்க்க முடியுமென்பதுடன், இதுவே இனப்பிரச்சினை தீர்விற்கு குந்தகமாக இருக்கக்கூடிய 'அதிகார அலகு' என்ற பிரச்சினையை தீர்ப்பதற்கான மாற்றமுமாகும்.

இந்தியாவை எடுத்துக்கொண்டாலும் கூட, அங்கிருக்கக்கூடிய முஸ்லீம்கள் தமிழ் முஸ்லீம்களாகவோ, மலையாள முஸ்லீம்களாகவோ, தெலுங்கு முஸ்லீம்களாகவோ, பீகாரி முஸ்லீம்களாகவோதான் இருக்கின்றார்கள். மதத்தால் அவர்கள் ஒன்றிணைந்திருந்தாலும் மொழியால் அவர்கள் வெவ்வேறானவர்களாகவே உள்ளார்கள். அதேபோல் இலங்கையிலும், மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டவர்களாகவே இங்குள்ள தமிழரும் முஸ்லீம்களும் உள்ளார்கள்.

தமிழ்நாட்டுத் தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அதேபோல் திருநெல்வேலித் தமிழ், மதுரைத் தமிழ், கோயம்புத்தூர் தமிழென பல மாற்றங்கள் உண்டு. இங்கும்கூட யாழ்ப்பாணத்தமிழ், மட்டக்களப்புத் தமிழ் என மாற்றங்கள் உள்ளதுபோல் முஸ்லீம் தமிழுக்கும் மாற்றங்கள் உண்டு. இது ஒரு மொழியின் ஆரோக்கியத் தன்மையை அதிகரிக்கின்றது. மொழியின் வளம் அதிகரிக்கப்படுவதுடன் அதன் செழிப்புக்கும் இது ஊக்குவிப்பாக இருக்கின்றது.

இந்நிலையில் தமிழ்–முஸ்லீம் மக்கள், தமக்குள் ஐக்கியப்பட்டு வாழ, தமது மொழி, கலை கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாக்க முயலவேண்டுமே தவிர, பேரினவாதிகளின் சதிவலைக்குள்ளோ அல்லது குறுகிய அரசியல் இலாப நோக்குள்ளவர்களின் சதிவலைக்குள்ளோ சிக்கிவிடக்கூடாது தமிழ், முஸ்லீம் மக்கள் மாத்திரமல்லாமல், தமிழ், முஸ்லீம் கட்சிகளும் சிந்திக்குமா? சிந்திக்க வேண்டும். வெல்ல வேண்டும். ●

> தமிழ்–முஸ்லீம் மக்கள், தமக்குள் ஐக்கியப்பட்டு வாழ, தமது மொழி, கலை கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாக்க முயலவேண்டுமே தவிர, பேரினவாதிகளின் சதிவலைக்குள்ளோ அல்லது குறுகிய அரசியல் இலாப நோக்குள்ளவர்களின் சதிவலைக்குள்ளோ சிக்கிவிடக்கூடாது. தமிழ், முஸ்லீம் மக்கள் மாத்திரமல்லாமல், தமிழ், முஸ்லீம் கட்சிகளும் சிந்திக்க வேண்டும். வெல்ல வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



**தமிழ்மக்களுக்கு உகந்ததென பெரும்பான்மை தமிழ்மக்கள் அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை, புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே அல்லாமல், புலிகளையும் திருப்திப்படுத்தக் கூடிய ஜனநாயக வழிமுறைகளுடான ஒரு சமாதான தீர்வு சாத்தியம் இல்லை என்பது புலிகளின் இதுவரைகால நடவடிக்கைகள் மூலம் தெளிவாகிவிட்டது.**

அரசாங்கம் தெரிவுக்குழு முன் சமர்ப்பிப்பதற்கான தீர்வு யோசனைகளை உள் ளடக்கிய சட்ட ஆவணத்தை வெளியிட்டிருக்கிறது. இந்நிலையில், சட்ட ஆவணத்தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் கூட்டாக அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றன. அவை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்; வரவேற்கப்பட வேண்டியவை.

இப்போது ஒருசாரார், தீர்வுத்திட்ட சட்ட நகல் புலிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; புலிகள் இல்லாவிட்டால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று தெரிவித்து வருகிறார்கள்.

இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வு காணும் முயற்சிகளில் புலிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதனை யாரும் எதிர்க்கவில்லை; அதற்கு எதிராக செயற்பட்டு வருபவர்கள் புலிகள் மட்டுமே. தமது ஒவ்வொரு நடவடிக்கைகள் மூலமும் இதனை அவர்கள் நிருபித்து வருகிறார்கள்.

புலிகள் இந்த சமாதான தீர்வு முயற்சிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புபவர்கள், அதன்மூலம் இனப்பிரச்சினை தீர வேண்டும்–தீரும் என்று நம்புபவர்கள் உள்ளார்கள். அவர்களின் வேண்டுகோள்கள் செவிமடுக்கப்பட வேண்டியவை. அதேவேளை புலிகளுக்காக பரிந்து பேசுவதும், செயற்படுவதும் புலிகளின் காதுகளுக்கு எட்ட வேண்டும்–எட்டினால் போதும் என்று கபட நாடகமாடும் கனவான்களும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை.

அவர்கள் புலிகள் என்ன சொல்கிறார்கள், இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட சமயத்திலிருந்து புலிகளின் கோரிக்கைகள், நடவடிக்கைகள் எத்தகையவை என்பது பற்றியெல்லாம் விளங்கிக் கொள்ளும் திறன் இருந்தும், அதுபற்றியெல்லாம் கணக்கெடுக்காமல் ஊதுகுழல்களாய் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை கணக்கெடுப்பது தீங்கு.

அரசாங்க தரப்பு பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளின்போது, புலிகள் அடிப்படைத் தேவைகள் தீர்க்கப்பட்ட பின்னரே அரசியல் பேச்சுவார்த்தைகள் என்றார்கள். அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்த அரசாங்கம் முன்வரவில்லை என்று அரசாங்கத்தை குற்றம் சாட்டினார்கள். மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை கண்காணிக்க வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளை–புலிகளின் விருப்பத்திற்கு இணங்க இந்தியா தவிர்த்துக்கொள்ளப்பட்டபோதும்–அவர்கள் தமது கடமைகளைச் செய்ய புலிகள் அனுமதிக்கவில்லை.

வெளிநாட்டு பிரதிநிதிகளை கடமையை செய்யவிடாமல் புலிகள் தடுத்தபோது மௌனமாயிருந்த புலி ஆதரவாளர்கள், இப்போது மூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்று கோருகிறார்கள்.

ஆக, இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதற்கு முன்னுக்குப் பின் முரணாயிருந்து முட்டுக்கட்டை போடுபவர்கள் இனவாதிகள், பிக்குமார்கள், எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல புலிகளும், புலிகளுக்கு ஆமா போடுபவர்களும்தான் என்பதே கசப்பான உண்மை.

புலிகளுக்கும் தீர்வுத்திட்ட யோசனைகளின் சட்ட நகல்களை வழங்க வேண்டும், அவர்களையும் இந்தப் பயிற்சிக்கு இழுக்க வேண்டும் என்று கூறுபவர்கள், ஏதோ இவ்வளவு காலமும் புலிகளை தள்ளிவைத்துவிட்டது மாதிரியும், இனிமேல்தான் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்பது போலவும் பேசியும் எழுதியும் வருவதுதான் வேடிக்கை.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டவேளையில், புலிகள் பிரதான பிரதிநிதிகளாக கணிக்கப்பட்டார்கள். ஜனாதிபதி சந்திரிகா அவர்கள், 'புலிகள் நாட்டின் ஒருபகுதியில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்; யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களுடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்' என்றுதான் குறிப்பிட்டிருந்தார்.

தமக்கு இருந்த சந்தர்ப்பத்தை சிதைத்து சீரழித்தவர்கள் புலிகளே அன்றி வேறுயாருமில்லை. புலிகள் தாங்களாகவே சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்கிக் கொண்டதோடு, சமாதான முயற்சிகளை குழப்பும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் தமிழ் பேசும் மக்களையும் அவஸ்தைகளுக்குள்ளாக்கியுள்ளார்கள்.

'நானில்லாமல் ஏலுமெண்டால் செய்து பார்' என்று ஊர்ச் சண்டியன்கள் மாதிரி தலைவரே சவால் விடுத்த பின்னர், அவர்களுக்கு மக்களின் நலன் பற்றி என்ன அக்கறையிருக்கப் போகிறது. எப்படியாவது சவாலை நிறைவேற்றினால் போதும் என்ற ரீதியிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், கட்சி நலன் குறித்து அக்கறை இருக்கவே செய்யும். அது புறக்கணிக்கப்படவும்முடியாது. ஆனால் இயக்க நலனை முதன்மை ஸ்தானத்தில் வைக்கப்படக்கூடாது. மக்களது நலனே முதன்மைப்படுத்தப்பட வேண்டும். புலிகள் அவ்வாறு மக்களின் நலனை முதன்மைப் படுத்தி பிரச்சினைகளை அணுகுவதாய்த் தெரியவில்லை.

சினிமாப் படங்களில் வரும் வில்லன், தன்னால் இயலாமல் போகும் சமயங்களில் தெருவில் விளையாடும் குழந்தையையோ அல்லது ஒரு பெண்மணியையோ பணயமாக்கி, அவர்களது கழுத்திலே கத்தியை வைத்து, எந்த அப்பாவியை துன்புறுத்தியாவது தான் தப்பிக்க நினைப்பதை, தனது குறிக்கோளை அடைய நினைப்பதை பார்க்கிறோம்.

இன்று புலிகள் நடத்தும் குண்டுத் தாக்குதல்களும் கூட இதே வகைப்பட்டவைதான். ஆனால் சினிமாப்பட வில்லனின் செயலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது முகம் சுழிக்கும் நமது சமூகத்தில் உள்ள சிலரே புலிகளின் செயலை வீரமாக வர்ணிப்பதையிட்டு விசனமும் வேதனையுமே மேலிடுகிறது.

> **சினிமாப் படங்களில் வரும் வில்லன், தன்னால் இயலாமல் போகும் சமயங்களில் தெருவில் விளையாடும் குழந்தையையோ அல்லது ஒரு பெண்மணியையோ பணயமாக்கி, அவர்களது கழுத்திலே கத்தியை வைத்து, எந்த அப்பாவியை துன்புறுத்தியாவது தான் தப்பிக்க நினைப்பதை, தனது குறிக்கோளை அடைய நினைப்பதை பார்க்கிறோம். இன்று புலிகள் நடத்தும் குண்டுத் தாக்குதல்களும் கூட இதே வகைப்பட்டவைதான்.**

> **இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வு காணும் முயற்சிகளில் புலிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதனை யாரும் எதிர்க்கவில்லை. அதற்கு எதிராக செயற்பட்டு வருபவர்கள் புலிகள் மட்டுமே. தமது ஒவ்வொரு நடவடிக்கைகள் மூலமும் இதனை அவர்கள் நிருபித்து வருகிறார்கள்.**

1985 காலப்பகுதியில் இனவெறி தாண்டவமாடிய வேளையில், அனுராதபுரத்தில் அப்பாவிச் சிங்கள மக்கள் கொல்லப்பட்டபோது, தமிழ் சமூகம் அதனை ஏற்க மறுத்தது. அதை செய்த புலிகள் அதனை உரிமைகோர துணியவில்லை.

ஆனால் இன்று இடம்பெறும் படுகொலைகள் இனப்பிரச்சினையின் தீவிரத்தை சிங்கள மக்களுக்கு புரியவைக்கும் என்று சிலர் எழுத துணிந்திருப்பதும், புலிகள் மறைமுகமாக உரிமை கோரியிருப்பதும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் எந்தளவிற்கு மாசு கவிந்திருக்கிறது என்பதையே பிரதிபலிக்கிறது.

வகுப்பறையில் குழப்படி அதிகம் என்று கருதுகிற ஒரு மாணவனை ஆசிரியர் 'மொனிற்றர்' ஆக்குவது உண்டு. அதேமாதிரி இங்கேயும் தீர்வுத்திட்டம் ஒன்றை அமுல் நடாத்துவதை புலிகள் குழப்புவார்கள் என்பதற்காக, சிலர் புலிகளையும் உள்ளடக்கிவிட்டால் பிரச்சினை இருக்காது என்று கருதுகிறார்களோ தெரியவில்லை.

பாடசாலையைப் பொறுத்தவரையில் மொனிற்றர் ஆக்குவதில் பிரச்சினை இல்லை. ஏனெனில், பாடசாலையின் நிர்வாகமே மொனிற்றர் கையில் வருவதில்லை. ஆனால் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை, தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை ஒப்படைப்பதாகும். புலிகள் தமது ஜனநாயக விரோத போக்குகளை கைவிடாத வரை அதற்கான தகுதியை அவர்கள் பெற மாட்டார்கள்.

புலிகள் சமாதானத் தீர்வில் நம்பிக்கையுள்ளவர்கள், அதில் நாட்டம் உள்ளவர்களாயின், அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படாமல் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது கண்டனத்துக்கு உரியது. அவ்வாறான ஒரு நிலையில், புலிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கோருவதில் நியாயம் உண்டு.

புலிகளுக்கே சமாதான முயற்சிகளில் நாட்டமில்லாதபோது, நடைபெறுகின்ற ஒரு சமாதான முயற்சியில் புலிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை, புலிகள் உட்பட சமாதான முயற்சிகளை குழப்ப நினைப்பவர்களுக்கே சாதகமாய் ஆகும். தீர்வுத்திட்டமே சந்திரிகா அரசின் சதி என்று கருதும் ஒரு குழுவுடன், சந்திரிகா அரசு பேச வேண்டும் என்று கோருவது தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றவோ சமாதான முயற்சிகளை வெற்றிக்கு இட்டுச் செல்லவோ உதவுமா?

புலிகளையும் இணைத்துக் கொள்ளாவிட்டால் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சுலபமில்லை என்பது உண்மை. ஆயுதபாணிகளான புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் அச்சுறுத்தலாய் இருப்பார்கள், இடையூறுகளை விளைவிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அது அவர்களது நிலைப்பாடு. அவர்கள் தமது நிலைப்பாடுகளில் மாற்றம் செய்துகொள்ளாதவரை, அவர்களிடம் இந்த தீர்வுத்திட்ட நகலை சமர்ப்பிப்பதாலோ, அவர்களையும் பயிற்சிக்கு இழுப்பதாலோ சமாதான முயற்சிகள் வெற்றிபெறப் போவதில்லை.

எனவே புலிகளை இணைத்துக் கொள்வது, மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதானத் தீர்வு முயற்சிகளை இறுதியில் சீரழிப்பதற்குத்தான் வழிவகுக்குமாயின், தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரு நியாயமான தீர்வுக்காக புலிகளது பயங்கரவாதத்தை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள், தமிழ்மக்களுக்கு

> **வெளிநாட்டு பிரதிநிதிகளை கடமையை செய்யவிடாமல் புலிகள் தடுத்தபோது மௌனமாயிருந்த புலி ஆதரவாளர்கள், இப்போது மூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்று கோருகிறார்கள். ஆக, இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண்பதற்கு முன்னுக்குப் பின் முரணாயிருந்து முட்டுக்கட்டை போடுபவர்கள் இனவாதிகள், பிக்குமார்கள், எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல... புலிகளும், புலிகளுக்கு 'ஆமா' போடுபவர்களும்தான் என்பதே கசப்பான உண்மை.**

உகந்ததென அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை, புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே அல்லாமல், புலிகளையும் திருப்திப்படுத்தக்கூடிய ஜனநாயக வழிமுறைகளுக்கூடான ஒரு சமாதான தீர்வு சாத்தியம் இல்லை என்பது புலிகளின் இதுவரைகால நடவடிக்கைகள் மூலம் தெளிவாகிவிட்டது

— விதுரன்

## ஊறுவாயன்.... (2ம் பக்க தொடர்ச்சி)

தெரியாமல் நிப்பினம். பிறகென்ன, அந்தரிச்சுத் திரியிற வாழ்க்கையைத் தவிர வீரப்பரம்பரை வேறேதும் கொள்ளாது. தெருவுக்கு மண்ணெண்ணெய் லாம்பும், சமையலுக்கு சூட்டடுப்பும், சவுக்காரத்துக்குப் பனங்காயும்தான் நமக்கு விஞ்ஞான முன்னேற்றங்கள்.... சாப்பாடும், மருந்தும், சம்பளமும் எங்கள் எதிரி நாட்டுக்காரன் அனுப்பிக் கொண்டிருப்பான். நாம் தனிநாட்டை நிர்வாக பரிபாலனம் செய்துகொண்டே எதிரிப் படைகளை அழித்து முடித்து விட்டுப் பிறகு சிங்களத்தையும் வென்று கொடிநாட்டும் வீரக் கனவில்..... வலிகாமத்தைவிட வன்னி வளமான பூமி, வன்னியிலும் வன்னிக் காடுகள் மிக வளமானவை என்று ஓடிக்கொண்டிருப்போம்.

நிப்பாட்டமுந்தி இதையுஞ் சொல்லிப் போட வேணும். அழிவுகளையும், அவலங்களையும் நல்ல வியாபாரப் பொருளாய் மாத்திச் சீவிக்கிற சிலபேர், தமிழ் வீரத்தையும், மக்களின்ரை அவல வாழ்க்கையையும் சர்வதேச லெவலிலை வலு உருக்கமாயும் புல்லரிப்பாயும் எழுதி–பேசி வித்து வருகினம். சண்டையின்ரையோ அல்லது சகோதரப் படுகொலையளின்ரையோ காத்துக்கூடப் படாமல் வெளிநாடுகளிலை இருந்துகொண்டு தமிழ் மக்களின் விதியெண்ணிக் கண்ணீர் உகுக்கினமாம்... அல்லது அவர்களது வீரஞ்செறிந்த போராட்டத்துக்கு ஆதரவு திரட்டுகினமாம்.... இவை தமிழ் மக்களின்ரை அவலத்தைச் சொல்லி இப்பிடிச் சர்வதேசரீதியாய் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறதுக்கெண்டே இஞ்சை சனம் தொடர்ந்து அழிஞ்சுகொண்டிருக்கிறது தான் நல்லதெண்டு யோசிக்கினமோ எண்டும் பயமாய்க் கிடக்கு. அந்தமாதிரி ஆக்கள் உருகி வழியினம் அல்லது வீரம் வளர்க்கினம் – சண்டையை நிப்பாட்டி சனத்தை நிம்மதியாய் வாழவைக்கிற வழியைப் பற்றி யோசிக்காமல்.

உள்ளூருக்கை சனம் எங்கை ஓடிச் சீவன் தப்புறதெண்டு ஆத்துப் பறந்து திரியுது. இவை உலக நாடெல்லாம் ஒவ்வொண்டாய்த் தட்டிவந்து "எங்கையும் நிம்மதி இல்லை, தமிழ் மக்கள் தனியாய் போறதுக்குத்தான் உறுதியாய் சண்டை பிடிக்க வேணும்" எண்டு தூரநிண்டு 'சூ'க்காட்டுகினம்.

இவையளுக்குள்ளாலையும் மீண்டு, தமிழ்ச் சனம் அழிவை நிப்பாட்டுற பாதைக்கு இறங்க வேணும்; துணிவோடை காலை எடுத்து வைக்க வேணும்.... எல்லாக் கடவுள்மாரும் ஒத்தபடி வந்து துணை நிக்க வேணும்.

பிறகு பாப்பம். வரட்டே?

படிப்பகம்

www.padippakam.com



# தீர்வு

வத்லா



குருடாய் செவிடாய் ஊமையாய்
முடமாய்
மூடமாய்
எனக்கே நான் சுமையாய்
இன்னும் எத்தனை காலம்?

பொறு பெண்ணே!
வருவானொருவன் உனை சுமக்க
மோன சப்தத்தில் மந்திரம் முணுமுணுத்து

நாண் பூட்டி
சங்கிலி மாட்டி
இட்டுச் செல்வான்
அவன் இருப்பான்
உன்
கண்ணாய் காலாய்
நாவாய் செவியாய்

ஓ! எவ்வளவு நல்ல செய்தி!
ஆனால்...
அதற்கு நான் என்ன விலை தர
வேண்டும்?

அதிகம் இல்லை பெண்ணே!
சிறிதளவு தங்கமும் வெள்ளியும்
வசதிக்கேற்ப வாகனமும்
குடித்தனம் நடத்த பாத்திரங்களும்
ஆயுசுக்கு விசுவாசமும் உழைப்பும்
அவன் பசிகளுக்குணவும்
தந்து
நீ
குருடாய் செவிடாய் ஊமையாய்
முடமாய்
மூடமாய்
நின்றால் போதும்.

நன்றி: சுபமங்களா



சமுதாயத்தில், ஒரு பெண் ஆணுக்குத் துணையாக இருக்கத்தான் படைக்கப்பட்டிருக்கிறாள். உயிரைவிட மேலான கற்போடு இருக்கணும், புருஷனுக்கே எப்போதும் உள்ளவளாக இருக்கணும் என்றுதான் சொல்லி இருக்கு.

'உனக்கு கல்வி இருக்க வேண்டும். உன்னை நீ வளர்த்துக் கொள்ள வேண்டும். உனக்குத் திறமை இருக்க வேண்டும்' என்றெல்லாம் சொல்லவில்லை. கணவனை சோபிக்கக் கூடிய திறமையெல்லாம் அவளுக்கு இருக்க வேண்டும். இதெல்லாம் ஆணுக்கு அவள் சுகம் தரத்தான். அவனுக்கு முன்னால் அவள் சாக வேண்டும். இப்படித்தான் சொல்லி வந்திருக்கிறோம்.

உதாரணமாகத் திருக்குறளை எடுத்துக்கொள்ளுங்கள். அது உலகப் பொதுமறை. அதில் சந்தேகமில்லை. திருக்குறளைச் சொல்கிற போது 'வாழ்க்கைத்துணை நலம்' என்று ஒரு அதிகாரம் போட்டிருக்கிறது. அதில் எல்லாமே பெண்ணுக்குத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாழ்க்கைத்துணை என்பது பொதுவாக இருபாலருக்கும் வேண்டியதுதான். ஐந்து குறள் அப்படிச்சொல்லி, ஐந்து குறள் இப்படிச் சொல்லியிருந்தாலும் பெண்ணை பெண்ணாக மதித்திருக்கிறது என்று ஒப்புக்கொள்வேன். எனவே எப்போதுமே பெண்ணை துணையாகச் சொல்லி இருக்கிறார்களே தவிர, பெண்ணை முழு மனுஷியாக தனித்தன்மையோடு–அவளை மதித்ததாக இல்லை.



பாரதி என்கிற எனது இளம் தோழி 'வார்ப்புகள்' என்று ஒரு புத்தகம் எழுதி இருக்கிறாள். 'பெண் வளர்க்கப்படவில்லை; வார்க்கப்படுகிறாள்' என்று அதற்கு அர்த்தம் சொல்லி இருக்கிறாள். பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒரு அச்சில் வார்த்து எடுத்து வைத்திருக்கிறோம் என்பது உண்மைதான். எனக்குத் தெரிந்து மகாகவி பாரதிதான் பெண்களுக்கு முழு மனித அந்தஸ்து கொடுத்திருக்கிறார் என்பேன்.

ஆண்குயில்தான் கத்தும். ஆனால் குயில் பாட்டில் பெண்குயிலை குரல் கொடுக்க வைத்திருக்கிறார். இன்னொரு விஷயம் என்னவென்றால், மாடன்–குரங்கன் இரண்டுக்கும் இடையில் குயில் இச்சகம் பேசிக் கொண்டிருக்கும். மாடன் என்பது உழைப்பு, குரங்கன் என்பது செக்ஸ். இந்த இரண்டுக்கும் இடையில் பெண்மை மாட்டிக் கொண்டிருக்கிறது. இதை விடுதலை செய்கிறவன் தான் கவிஞன்; ராஜகுமாரன்! இது பெண் விடுதலைக்காகப் பாடப்பட்டது என்பதுதான் என் கருத்து.

– ராஜம் கிருஷ்ணன்



# மார்ச் 8 உலக மகளிர் தினம்

## அதிகாரம்

கட்டம் போட்டதோ....
பூ டிசைன் போட்டதோ....
வெள்ளையோ கலரோ
காட்டன் சேலை ஒன்னு வாங்கிக்கொள்.

விரல் நகத்தில் விளக்கொளி வீசணும்
ரோஸிலோ சிவப்பிலோ
ரெண்டிலும்கூட நெயில்பாலிஷ் வாங்கிக்கொள்.

கைக்கு ஆறு
கலகலக்கும் கண்ணாடி வளையல்கூட
உன் இஷ்டத்துக்கு.

அக்கம் பக்கம் யாரேனும்
அக்கப்போர் சொல்வார்களா
கவலை எதுக்கு
உலகத்தில் இல்லாததா
உதட்டில் பூச லிப்ஸ்டிக்கும் சேர்த்துக்கொள்.

கண் இமையில் கீற்றுவிரிய
டப்பிமை மட்டுமல்ல
பென்சில் மையும்.

அப்படியே முகத்தில் போட
லேட்டஸ்ட்டாக டி.வி. நாயகி
விளம்பரத்தில் போட்ட பவுடரும்தான்.

எல்லாமும் வாங்க
பணம் தருவேன்
தாராளமாய்.... மிகத் தாராளமாய்....

ஆனால் ஒன்று –
ஒருகாசு குறையாமல்
என்கைக்கு வரவேண்டும்
நீ வாங்கும் சம்பளம் மட்டும்.

– ஹெச். ஜி. ரசூல்

## திரைகளின் பின்னால்

இரவின் மடியில்
இருளின் இராச்சியம்,

உயிருள்ள ஜீவன் நான்.
ஓரமாய் உட்கார்ந்து
ஒன்றுமே அற்று
சும்மா இருக்க முடியாது.

சென்று மறையும் இக்கணங்களில்,
கனன்று உழலும் நெஞ்சக் குமுறல்கள்
நெஞ்சக் கனப்பை
மேலும் அதிகமாக்கும்.
திரைகளின் மூடல்
ஒன்றன் மேல் ஒன்றாய் எத்தனை எத்தனை?
அதற்கு மேலும், இதுவும் ஒன்றா?
எல்லாவற்றையும் தன்னுள்
மறைக்கும் இந்தத் திரைக்குள்,
எங்ஙனம் இருப்போம்?

இறந்தவரல்லர் நாம்,
இதயம் துடிக்கும் ஏழைப் பெண்கள்;
மண்ணின் குழந்தைகள்;
மானிடப் பெண்கள் நாம்;
இனியும் சகியோம் இருளின் ஆட்சியை.
எதற்கும் அஞ்சோம் துன்பம் ஏற்றிடோம்
துயர் மிகக் கொள்ளோம்.
வென்று இவ்வுலகில் நிலைத்திட வந்தோம்.
இன்று பிறந்தோம்
இன்று பிறந்தோம்
வென்று வாழ்ந்திட
இன்று பிறந்தோம்.

– சுல்பிகா



## இன்று நான் பெரிய பெண்

நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்,

பூவைப் போலவும்
காற்றைப் போலவும்
நீரைப் போலவும்
குதித்துத் திரிந்து சுற்றிய பருவத்தில்

காலை உதைத்து வீட்டு அழவும்
கல கல என்று கைதட்டிச் சிரிக்கவும்
கோபம் வந்தால் கொப்பியைக்
கிழிக்கவும்
முடிந்த காலம்,

மரத்தில் ஏறவும் மாங்காய் பிடுங்கவும்
பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடனே
கிட்டி அடிக்கவும் ஒளித்துப் பிடிக்கவும்
ஒன்றும் பேசிலர் எவரும்,

இன்று
நான் பெரிய பெண்.
உரத்துச் சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை; நாணம்
பெண்மையின் அணிகலம்.
கதைத்தல்; சிரித்தல்;
பார்த்தல்; நடத்தல்; உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி....

நான்
கல்லாய்
பாறையாய்
பனியாய்
பெண்ணாய்....

– அ. சங்கரி



www.padippakam.com





முழுத் தமிழ் மக்களையும் அணிதிரட்டிய மக்கள் போராட்டங்களினூடு எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம் என்பதில் நாம் இன்னும் உறுதியாக உள்ளோம். இங்கிருக்கக்கூடிய சகல இனங்களும் சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தும் வரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதற்காகப் போரிடும்.

# ★ தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்ததேன்?

# ★ வடக்கு கிழக்கு ஒன்றிணைப்பை வற்புறுத்துவதன் காரணம் என்ன?

# ★ யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் முஸ்லீம்கள் விரட்டியடிக்கப்பட்டது பற்றி?

### இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களும் கல்வி, பொருளாதார பிரச்சினைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்படியிருக்க, இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மட்டும் இருக்கும் முக்கிய பிரச்சினைகள் என்ன என்று சற்று விளக்கிக் கூறுவீர்களா?

இலங்கையில் இருக்கக்கூடிய சிங்கள பெரும்பான்மை மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது உண்மையே. சிங்கள மக்களைப் போன்றே ஏனைய சகல மக்களும் அதே விதமான பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள் என்பதும் உண்மையே. ஆனால் தமிழ் மொழி பேசுகின்றோம் என்ற காரணத்திற்காக தமிழ், முஸ்லீம் மக்கள் இன ரீதியாக ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதுதான் கவனத்திலெடுக்கப்பட வேண்டியது. இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இது படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. கல்வி, வேலை வாய்ப்பு, கலை கலாச்சாரம் போன்ற பல படிமுறைகளிலும் இவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு இரண்டாம்தர பிரஜையாக ஆக்கப்பட்டள்ளார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்கள், அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்குள்ளாக்கப்பட்டு தமது சொந்த பூமியிலேயே தமது பிரதிநிதித்துவத்தை இழந்து வருகின்றார்கள்.. இதனால் இவர்களது தனித்துவமே இழக்கப்படுகின்றது. மொத்தத்தில், இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் சிங்கள மக்களுக்கு அவலங்கள் உள்ள அதேசமயம், தமிழ் மக்கள் என்பதற்காக இன்னும் பலபடி அதிகமாக தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்.

### தமிழ்-சிங்கள மக்களின் ஐக்கியம் எவ்வாறு சீர்குலைந்தது?

தமிழ் மக்களுக்கு விரோதமான சிங்கள இனத்துவேசத்தை சிங்கள அரசியல்வாதிகள் வளர்ந்து வந்ததுடன், அரசு அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்ள இவ் இனத் துவேஷத்தையே இவர்கள் தொடர்ந்து பிரயோகித்து வந்துள்ளார்கள். இதனால் இந்நாட்டில் பல இனக்கலவரங்கள் தோன்றி பல நூறுபேர் மரணமடைந்துமுள்ளனர். 1977, 83 ஆகியன இந்நாட்டில் நடந்த மிகப்பெரும் இனக் கலவரங்களாகும். இதனைப் போன்றே சிங்களம் மாத்திரம் அரச கரும மொழி, சிங்களம் படிக்காவிட்டால் வேலை வாய்ப்பில்லை, கல்வியில் தரப்படுத்தல், சிங்களக் குடியேற்றம் போன்ற இன ரீதியிலான அரசின் அணுகுமுறைகள், சிங்கள-தமிழ் மக்களுக்கிடையில் ஐக்கியத்தை சிதைவடையச் செய்தன.

### தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்ததேன்?

மேற்கண்ட அடக்குமுறைகளுக்கெதிரான தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் அரச வன்முறையால் அடக்கப்பட்டது. அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்களின் கோரிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்து வந்தது. இந்நிலையில் இந்நாட்டில் நாமும் பெரும்பான்மை மக்களுடன் சமத்துவமாக வாழ, எமது உரிமைகளை நாம் வென்றெடுத்திட, எமது தனித்துவத்தை காப்பாற்ற ஆயுதமேந்திப் போராடும் நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். மாறி மாறி வந்த அரசாங்கங்கள், தாம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக தமிழ் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கூட, அதிகாரத்திற்கு வந்தபின் கிழித்தெறியப்பட்டன. இந்நிலையில் தமிழ் மக்கள் சிங்களத் தலைமைகளை நம்ப முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். மொத்தத்தில், அரசினதும், சிங்கள அரசியல்வாதிகளினதும் தொடர்ச்சியான அடக்குமுறைகள், தமிழ்மக்களை ஆயுதமேந்தி போராட நிர்ப்பந்தித்தன.

### உங்கள் இயக்கத்தின் ஆரம்பம் பற்றியும், அதன் செயற்பாடுகள், குறிக்கோள் பற்றியும் கொஞ்சம் கூறுங்களேன்?

நான் மேலே குறிப்பிட்டது போன்றே அரசின் அடக்குமுறைகளுக்கெதிராக தமிழ்மக்கள் கௌரவமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கான ஓர் சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.உம் போராட்ட களத்தில் இறங்கியது. இனப்பிரச்சினை கூர்மையடைந்திருந்த காலத்தில், தமிழ் மக்களை விடுதலை அடையச் செய்வதன் மூலமே சிங்கள தொழிலாளி வர்க்கமும் விடுதலையடைய முடியும், அதன் மூலம், எதிர்காலத்தில் இரு இனமும் கைகோர்த்து சகோதரர்களாக வாழமுடியும் என்பதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். நம்பிக்கை கொண்டிருந்தது. எங்களது போராட்டம் நிச்சயமாக சிங்கள மக்களுக்கெதிரானதல்ல. மாறாக அடக்கி ஒடுக்கும் சிங்கள அரசுக்கெதிரானதாகவே இருந்தது. இந்த அரசாங்கங்கள், இனத்துவ அடிப்படையில் தமிழ், முஸ்லீம் மக்களை அடக்கி ஒடுக்கிவந்த அதேசமயம், இம் முதலாளித்துவ அரசாங்கங்கள் சிங்கள தொழிலாளி வர்க்கத்தையும் அடக்கி வந்தது. அதுமாத்திரமல்லாமல், உணர்ச்சியூட்டும் இனத்துவேசக் கருத்துக்களால் தமிழ், சிங்கள தொழிலாளி வர்க்கங்களுக்கிடையிலும் பிளவினை ஏற்படுத்தி வந்தது. இந்நிலையில் அரசுக்கெதிராக போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இருந்தபோதும், 1987ம் ஆண்டு ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆயுதங்களைக் கையளித்து, ஜனநாயகப் பாதைக்கு திரும்பியது. இதன் மூலம் வட-கிழக்கு மாகாண அரசையும் ஒன்றரை வருட காலம் நாம் ஆட்சி செய்து வந்தோம். அதுமாத்திரமல்லாமல், இதனூடு தமிழ்-சிங்கள நல்லுறவைப் பேணவும் நாம் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டோம். ஐந்து அமைச்சர்களைக் கொண்ட வட-கிழக்கு மாகாண சபையில் சிங்கள, முஸ்லீம், அமைச்சர்களுக்கும் இடமளித்தோம். அத்துடன் 1981 வேலை நிறுத்தத்தில் நிறுத்தப்பட்ட வட-கிழக்கைச் சார்ந்த தமிழ், சிங்கள, முஸ்லீம் உத்தியோகத்தர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினோம். பாராளுமன்றத்திலும் 7 ஆசனங்களைக் கொண்ட ஓர் கட்சியாக அங்கம் வகித்தோம். ஆனால் வட-கிழக்கு மாகாணசபைக்கான பாதுகாப்பு பிரேமதாசா அரசால் மறுக்கப்பட்டது; அதிகாரங்கள் வழங்க மறுக்கப்பட்டன. அரசு புலிகளின் உதவியோடு மாகாணசபையை சீர்குலைத்தது. இதற்காக புலிகளுக்கு அரசால் பெருமளவு ஆயுதங்களும் வழங்கப்பட்டன. இது தமிழ் கட்சிகளைப் பாவித்தே வட-கிழக்கு மாகாணசபையை கலைக்கும் அரசின் திட்டத்தை துலாம்பரமாக அம்பலப்படுத்தியது. இந்நிலையில் சிங்கள அரசுகளின் மேல் இருந்த அற்பசொற்ப நம்பிக்கைகள் மேலும் சிதறடிக்கப்பட்டது. இருப்பினும், முழுத் தமிழ் மக்களையும் அணிதிரட்டிய மக்கள் போராட்டங்களினூடு எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்போம் என்பதில் நாம் இன்னும் உறுதியாக உள்ளோம். இங்கிருக்கக்கூடிய சகல இனங்களும் சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தும் வரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதற்காகப் போரிடும்.

### வடக்கு கிழக்கு ஒன்றிணைப்பை வற்புறுத்துவதன் காரணம் என்ன?

வட-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பிரதேசம். இங்கு தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழ், முஸ்லீம் மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இப் பிராந்தியங்களை தமிழ் பேசும் மக்களே பிரதிநிதித்துவப் படுத்தினார்கள். ஆனால் சுதந்திரத்தின் பின் வந்த அரசுகள் திட்டமிட்ட வகையில், இங்கு சிங்கள மக்களை குடியேற்றி வந்தன. இதன் மூலம் பெரும்பான்மையாக இருந்த தமிழ் பேசும் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே சிறுபான்மையாக்கப்பட்டனர். இதன் மூலம் சிங்களப் பிரதிநிதித்துவங்கள் அதிகரிக்கப்பட்டன. 1960களுக்குப் பிற்பாடு, அம்பாறை, திருகோணமலை, வவுனியாவில் சிங்களப் பிரதிநிதித்துவங்கள் உருவாக்கப்பட்டதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். இதன் மூலம் சிறுபான்மை இனங்கள் தமது தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டு வந்தது. இதிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே வட-கிழக்கு இணைப்பு அவசியமாகின்றது.

அதுமாத்திரமல்லாமல் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட வட-கிழக்கு பிரதேசத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்வதாலும், அவர்களது கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி ஆகியவை பொதுமைப்பட்டது என்பதாலும் நாம் இணைந்து வாழ்வதன் மூலம் இவற்றை வளர்த்துக் கொள்ளலாம் என்றும் நம்புகின்றோம். அத்துடன் பொருளாதார ரீதியிலும், கல்வியிலும், இன்னும் சகல துறைகளிலும் முன்னேறுவதற்கு, வட-கிழக்கு இணைந்த அலகு உதவிகரமாக இருக்கும்.

இதனடிப்படையிலேயே 1987ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வட-கிழக்கு இணைக்கப்பட்டது. 1987இல் இருந்து இன்றுவரை ஏறத்தாழ 9 வருடங்கள் தற்காலிகமாக இணைந்திருக்கும் இப்பகுதியை நிரந்தரமாக இணைக்குமாறு கோருகின்றோம்.

### இலங்கை இராணுவம் யாழ்நகரை கைப்பற்றியது பற்றி....?

இலங்கை இராணுவம் யாழ்நகரைக் கைப்பற்றுவதோ, இல்லையேல் இன்னுமோர் நகரைக் கைப்பற்றுவதோ பெரிய விடயமல்ல. ஓர் அரசு இலட்சத்துக்கு மேற்பட்ட துருப்புக்களையும், குண்டுவீச்சு விமானங்கள், கடற்கப்பல்கள், பாரிய ஆயுதங்கள், டாங்கிகள் என சகல வசதிகளையும் கொண்டதோர் அரசு இலங்கையின் எப்பகுதியையும் கைப்பற்றலாம். ஆனால் இதன்மூலம் பிரச்சினைக்கு தீர்வேற்பட முடியுமா என்பதுதான் இன்றுள்ள முக்கிய கேள்வியாகும். 51நாள் முயற்சி செய்து யாழ்நகரை கைப்பற்றினார்கள். ஆனால் இன்று அது மனித நடமாட்டமற்ற சூனியப் பிரதேசமாகவே உள்ளது. இதனைப் பாதுகாக்க 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட துருப்புக்கள், கோடிக்கணக்கான பணம் செலவீடு, அன்றாடம் இராணுவத்தினரும், புலிகளும் மோதல் இவையே இன்னும் யாழ் நகரின் சூழ்நிலையாக உள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தை பிடித்ததற்காக அரசாங்கம் பெருமிதம் கொள்ளலாம்; அதேசமயம் புலிகளின் தோல்வி அவர்களுக்கு மனச் சோர்வை கொடுத்திருப்பதோடு, புலிகள் மீது மக்களுக்கு நம்பிக்கையீனமும் ஏற்படலாம். ஆனால் இவற்றின் மூலம் ☞

படிப்பகம்

www.padippakam.com



சமாதானமும், தீர்வும் எட்டப்பட்டிருந் தாலே அதில் ஓர் அர்த்தமிருக்கும்.

ஆனால் இன்றுள்ள சூழ்நிலை அவ்வாறில்லை. புலிகள் மீண்டும் வன்னியில் தம்மைத் ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளார்கள். இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் பலம் இன்னும் அவர்களிடம் உள்ளது. இன்னும் பல வருடங்களுக்கு இந்த யுத்தத்தை அவர்களால் தொடரமுடியும். அதற்கான ஆட்பலமும், ஆயுதபலத்தையும் அவர்கள் கொண்டுள்ளார்கள். இந்நிலையில் யாழ்ப்பாணத்தை, மட்டக் களப்பை பிடிப்பதென்பது தீர்வாகாது. உண்மையான நேர்மையான பேச்சுவார்த் தைகள் மூலமாகவும், விட்டுக்கொடுப்புகள் மூலமாகவுமே இந்நாட்டில் அமைதியை சமாதானத்தை உருவாக்க முடியும்.

## தமிழ் மக்கள் பற்றிய இன்றைய ஜனாதிபதியின் அணுகுமுறை எப்படி?

அரசியல் தீர்வொன்றின் மூலமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென்பதில் ஜனாதிபதி இன்றும் உறுதியான நம்பிக்கை கொண்டவராகவே உள்ளார். அனால் அவ்வரசியல் தீர்வொன்றைக் கொண்டுவருவதில் அவர் கடைப்பிடிக்கும் வழிமுறைகள், பிரச்சினைகளைத் தீர்க்க உதவுமா? என்பதில் நிறையவே சந்தேகங்கள் உள்ளன.

ஆரம்பத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. ஆனால் ஏதோ காரணங்களால் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டன. பின்னர் ஜனாதிபதி அரசியல் தீர்வுக்கான சில ஆலோசனைகளைத் தெரிவித்தார். இது தொடர்பாக பாராளுமன்றக் கட்சிகளையும் கூப்பிட்டு விளக்கமளித்தார். இவ்வாலோசனைகள் செழுமைப்படுத் தப்பட வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எஃப். கோரியது. ஏனைய பல தமிழ் கட்சிகளும் அதே கருத்தினை தெரிவித்தன. இது தொடர்பாக என்னென்ன திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எஃப். திருத்தங்கள் அடங்கிய ஓர் அறிக்கையை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தது. இது தொடர்பாக கலந்துரையாட நேரமொதுக்கித் தரும்படியும் கேட்கப்பட்டது. ஆனால் நேரம் ஒதுக்கித் தரப்படவில்லை. அதுமாத்திரமல்லாமல் வேறு எந்தத் தமிழ் கட்சிகளுடனும் இது தொடர்பான பேச்சுவார்த்தை நடாத்தப் படாமலேயே, இன்று ஓர் அரசியல் சட்ட நகல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இன்னும் பல குறைபாடுகள் உள்ளன. இக் குறைபாடுகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தீர்க்கப்பட மாட்டாது என்பதை நாம் தெளிவாக உணர்ந்துள்ளோம்.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஓர் சட்ட நகலை வைக்கு முன்னர் தமிழ்க் கட்சிகளை அழைத்து ஆலோசித்திருக்கலாம். அனால் அது எதுவுமே இல்லாமல் அரசு தனது விருப்பத்திற்கு அல்லது சிங்கள இனவாத சக்திகளை திருப்திப்படுத்துவதற்கு ஓர் அரசியல் நகலை வைத்துவிட்டு. அதற்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவளிக்க வேண்டுமெனக் கோருகின்றது. சட்டநகல் தொடர்பாக பௌத்த துறவிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் ஓர் அரசாங்கம், பிரச்சினையுடன் சம்பந்தமான தமிழ்க் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமை வேதனை அளிக்கும் விடயமாகும். இதனால் அரைகுறை சட்ட நகலிற்கு ஆதரவளிக்க முடியாத நிலையிலேயே தமிழ் கட்சிகள் உள்ளன. அரசு தமிழ் கட்சிகளுடன் பேசி இச்சட்ட நகலை செழுமைப்படுத்துமாயின் ஜனாதிபதியின் முயற்சி அர்த்தமுள்ளதாய் இருக்கும்.

## இந்த சட்டவரைபில் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதை ஏன் எதிர்க்கிறீர்கள்?

இச்சட்ட வரைபில் பிராந்திய சபையை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பிராந்திய சபைகள் அரசியல் சாசனத்துக்கு முரணாக நடக்கக் கூடாதென்பதும், அவற்றுக்கெதிராக சரியான பாதுகாப்பான சரத்துக்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பதிலும், எமக்கு மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. ஆனால் அவை சரியான முறையில் வடிவமைக்கப்பட வேண்டும். ஏதாவதொரு சிறிய ஓட்டை தென்பட்டாலும், அதனைப் பாவித்து மாகாணசபைகளை கலைப்பதே இலங்கை வரலாறும், இந்திய வரலாறும் ஆகும்? ஆகவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபை தனக்குரிய காலத்துக்கு பதவி வகிப்பதை, ஜனாதிபதியோ அரசோ தாம் விரும்பியபடி கலைப்பதை அனுமதிக்கக்கூடாது என்பதுடன், ஒரு பிராந்தியசபை அரசியல் சாசனத்துக்கு முரணாக நடந்தார்கள் என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தும் பட்சத்தில் அதனை கலைப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிடலாம். இல்லையேல் ஸ்திரமற்ற அரசுகளும், பொருளாதார வீழ்ச்சியும், மக்களுக்கு நம்பிக்கையீனங்களுமே ஏற்படும். இன்று இருக்கக்கூடிய அரசியல் சட்ட நகலிலும் இவ்வாறான ஓட்டைகள் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம். இது எதிர்காலத்தில் ஜனாதிபதி தனது அரசியல் விருப்பத்திற்கு ஏற்ப பிராந்திய சபைகளை கலைக்கவே வழிவகுக்கும். இதற்கெதிராக நாம் நீதிமன்றத்தில் கூட நியாயம் கேட்க முடியாத நிலையே இன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே தான் இவ்வதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமெனக் கோருகின்றோம்.

## இந்த சட்டவரைபை சில பௌத்த பிக்குகளும் எதிர்க்கின்றனரே?

பௌத்த பிக்குமாரைப் பொறுத்தவரை அவர்கள் பௌத்தத்தையும், சிங்களத்தையுமே ஒரு மதமாகவும், ஒரு மொழியாகவும் கருதுகின்றார்கள். பௌத்த துறவிகளிலும் இதிலிருந்து மாறுபட்ட முற்போக்கு எண்ணங்கொண்ட துறவிகளும் உள்ளார்கள். இருந்த பொழுதிலும் ஆதிக்கம் வகிப்பவர்கள் மேலே முதலில் குறிப்பிடப்பட்டவர்களே. இந்த நாடு ஓர் பல்லின, பல மதங்களைக் கொண்ட நாடென்பதையும் இந்நாட்டில் சகலருக்கும் சமத்துவமான உரிமைகள் உண்டென்பதையும் ஏற்க மறுக்கின்றார்கள். இது அடிப்படையில் மத வாதத்தாலும், இனவாதத்தாலும் உந்தப்பட்டு ஏற்படுவதே. இதனால்தான் தமிழ் மக்களுக்கு ஏதாவது அற்ப சலுகைகள் கொடுத்தாலும் இவர்கள் அதனை எதிர்க்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் மதத் துறவிகள் அனைவரும், அது புத்த பிக்குகளாக இருந்தாலென்ன, பாதிரிகளாக இருந்தாலென்ன, உலாமாக்களாக இருந்தாலென்ன, இந்துத் துறவிகளாக இருந்தாலென்ன இவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி இருப்பதே நாட்டுக்கு செய்யும் பெரும் சேவையாகும். இந்தியாவில் இந்துத் துறவிகளால் பிரச்சினை; இலங்கையில் புத்த பிக்குகளால் பிரச்சினை. இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் பிரச்சினை. எனவே துறவிகள் அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தால் பல நாடுகளில் பிரச்சினைகளே தோன்றாது.

## யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் முஸ்லீம்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இதுபற்றிய உங்கள் கருத்து?

புலிகளின் மோசமான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. வடபகுதியில் இருந்த முஸ்லீம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எந்த விரோதமும் இருந்ததில்லை. இவர்களுக்கிடையில் காணி எல்லைச் சச்சரவுகள் கூட நடந்ததில்லை எனலாம். அவ்வளவு தூரம் ஐக்கியமாக, அந்நியோன்னியமாய் வாழ்ந்தவர்கள் நாங்கள். ஆரம்பத்தில் பல்வேறுபட்ட இயக்கங்களிலும் கூட முஸ்லீம் சகோதரர்கள் இணைந்து பணியாற்றினார்கள். இவர்களை உடுத்த துணியுடன் புலிகள் விரட்டியது மிகவும் கேவலமானதும், கொடுமையானதுமாகும். அதுமாத்திரமல்லாமல், புலிகள் தமது போராட்ட வரலாற்றில் விட்ட மிகப்பெரும் தவறுகளில் இதுவும் ஒன்றாகும். இம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப வேண்டும். அவர்கள் மீண்டும் தமது பழைய வாழ்க்கையை தொடர வேண்டுமென்பதே எமது விருப்பம். ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதற்கான முழு முயற்சிகளையும் நல்கும். ●

# அதிகாரப்பகிர்வு ஓர் கண்ணோட்டம்



1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி உருவாக்கப்பட்ட இந்திய -இலங்கை ஒப்பந்தத்தினூடு "மாகாணசபை" என்றஓர் ஆட்சிமுறை இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் வசம் இருக்கக்கூடிய அதிகாரங்களில் ஒரு பகுதியை மாகாணங்களுக்கு வழங்குவதன் மூலம், மாகாண மட்டத்தில் ஆட்சி அதிகாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஓர் தீர்வாகவே இம் மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டபோதும், தமிழ் மாகாணங்களுக்கு மாத்திரம் அதிகாரங்களை வழங்கினால் சிங்கள மக்கள் அதனை எதிர்ப்பார்கள் என்ற காரணத்தால், இலங்கையில் இருக்கக் கூடிய சகல மாகாணங்களுக்கும் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களின் கோரிக்கைக் கிணங்க வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு மாகாணமாகவும் ஏனையவை ஏற்கனவே இருந்த மாதிரியாக 7 மாகாணங்களாகவும் இருந்தது. மொத்தத்தில் இலங்கையில் இருந்த 9 மாகாணங்கள், வட-கிழக்கு இணைந்ததால் 8 மாகாணமாகியது.

இந்த வட-கிழக்கு இணைப்பு என்பது தற்காலிகமானதே என்றும், ஒரு வருட ஆட்சியின் பின்னர் அதனை நிரந்தரமாக்குவதற்கு கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் ஓர் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இவ் வாக்கெடுப்பு நடைபெறாதெனவும், வட-கிழக்கு நிரந்தரமாகவே இணைந்திருக்குமெனவும், இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ராஜீவ்காந்தி உறுதிமொழி அளித்திருந்தார். 87இலிருந்து இன்று வரை ஏறத்தாழ 9 வருடங்களாக இச்சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாமல் ஒத்திப்போடப்பட்டு வருவதற்கும், இலங்கை இந்தியாவிற்கு கொடுத்த உறுதிமொழியே காரணமாகும்.

## 76 வது சரத்து

இம் மாகாணசபைகளுக்கு 13வது திருத்தச்சட்டத்தினூடு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு என்ற தத்துவத்தின் கீழேயே இவ்வதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதேசமயம் இலங்கை அரசியல் சாசனத்தின் 76வது சரத்து கீழ்கண்டவாறு கூறுகின்றது. "பாராளுமன்றம் மாத்திரமே இலங்கையின் சட்டவாக்கும் சபையாகும். இப்பாராளுமன்றம் தனது அதிகாரத்தை வேறு எச்சபைக்கும் பகிர்ந்து கொடுக்க முடியாது". இதன்பிரகாரம் பார்த்தால் எந்த ஓர் மாகாணத்திற்கும், தனக்கொதுக்கப்பட்ட அதிகாரங்களில் கூட அது சட்டமியற்றும் உரிமையை இழந்து விடுகின்றது.

இதனால்தான் அன்று அதிகாரப் பகிர்வு நடைபெறவில்லை, ஆனால் அதிகாரப் பரவலாக்கம் நடைபெற்றுள்ளதென அரசியல் விஞ்ஞானிகள் கூறினார்கள். (அதிகாரப்பரவலாக்கல் என்பது மத்தியில் இருந்து மாகாணங்களுக்கு சில அதிகாரங்களைப் பரவலாக்குவதாகும். இவற்றை மத்திய அரசு விரும்பிய நேரத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அதிகாரப் பகிர்வு என்பது அப்படியல்ல. மத்தியில் இருந்த சில அதிகாரங்கள் முற்றுமுழுதாகவே மாகாணங்களுக்கு உரித்தாக்கப்படுகின்றது. அதன்பின்னர் மத்திய அரசாங்கம் இதில் தலையிடும் உரிமையை இழந்து விடுகின்றது).

இவ்வகையில் பார்க்கும்போது 13வது திருத்தச் சட்டத்தினூடு நடைபெற்ற அதிகாரப் பரவலாக்கலுக்கும், இன்று நடைபெறுகின்ற அதிகாரப் பகிர்வுக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு. 1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, இனப்பிரச்சினை தீர்விற்காக சில ஆலோசனைகளை முன்வைத்தார். அவ்வாலோசனைகளில் ஒன்று, மேலே குறிப்பிட்ட சரத்து 76ஐ நீக்குவதென்பதாகும். இதன்மூலம் சகல பிராந்திய சபைகளும் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவிருக்கின்றன. அத்துடன் இலங்கை பிராந்தியங்களின் ஒன்றியமாக இருக்கும் என்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான மாற்றமாகும்.

ஆனால் அதிகாரப் பகிர்வு விடயத்தில், 95 ஆகஸ்ட் 3ம் திகதிய ஆலோசனைகளில் பிராந்தியங்களுக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டே, இன்று பிராந்தியங்களுக்கானஅதிகாரங்களை வழங்கும் சட்டவரைபு வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் அதிகாரப் பகிர்விற்கான புதிய சட்டவரைபும்கூட அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டபோதும். அதுவும் கூட இலங்கையில் இருக்கக் கூடிய சகல பிராந்தியங்களுக்கும் அதிகாரத்தைப் பகிர்வதென்ற அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. சகல பிராந்தியங்களுக்கும் அதிகாரத்தைப் பகிர்வது என்ற கோட்பாட்டில் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் வரும்பொழுது. அது இனப்பிரச்சினை தீர்விற்கான ஆலோசனைகள் என்ற தன்மையை இழந்துவிடுகின்றது.

ஏனெனில் மத்தியஅரசு தன்னிடம் இருக்கும் மிகப்பெரும்பாலான அதிகாரங்களை இழந்து விடுவோமோ என பயப்படுவதால் அதிகாரப் பகிர்வைக்கூட சரியான முறையில் செய்ய முடியாமல் போய்விடுகின்றது. மேற்கண்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டே இன்றைய அதிகாரப்பகிர்விற்கான சட்டவரைபை நாம் பரிசீலனைக்கு எடுக்க வேண்டும்.

## கலைப்பு அதிகாரம்

95 ஆகஸ்ட் 3ம் திகதிய ஜனாதிபதியின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் இந்திய அரசியல் சாசனத்திலும்விட மேலானது என இதனைத் தயாரித்த சில அரசியல்வாதிகள் குறிப்பிட்டார்கள். ஏனெனில் இந்திய அரசியல் சாசனத்தின் 356வது பிரிவு, இந்தியாவில் இருக்கக்கூடிய மாநில அரசுகளை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்யும் அதிகாரத்தை ஆளுநருக்கு கொடுக்கின்றது. ஆனால் ஆகஸ்ட் 3ம் திகதிய ஜனாதிபதியின் ஆலோசனைகளின் பிரகாரம் இலங்கையில் உருவாக இருக்கும் பிராந்திய சபைகளை ஆளுநர் எந்தவகையிலும் கலைக்க முடியாது என்ற சரத்து சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள்.

ஆனால் தற்பொழுது முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய சட்டவரைபில் அது முற்று முழுதாக மாற்றப்பட்டு, ஓர் பிராந்திய சபையைக் கீழ்க்கண்டவாறான நிலமைகளில் ஜனாதிபதி கலைக்கலாம்:

1. பிரதேசமொன்றின் பாதுகாப்பு அல்லது பொதுமக்களின் ஒழுங்கு ஆயுதந்தாங்கிய போராட்டத்தால் அச்சுறுத்தப்படுகிறது என,
2. பாரதூரமான உள்ளூர்க் கலவரங்கள்,
3. பிரதேச நிர்வாகத்தின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை குடியரசின் இறைமைக்கும் ஒற்றுமைக்கும் ஆபத்தொன்றை விளைவிக்கும்என ஜனாதிபதி உறுதியாக நம்பினால்,
4. ஆயுதந்தாங்கிய கலவரத்தை அல்லது போராட்டத்தை ஊக்குவிக்கிறதான,
5. தெளிவானதும் நிலைபேறானதுமான ஆபத்தொன்றாக அமையக்கூடிய முறையில் வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறுகின்ற நிலைமையொன்று உருவாகியுள்ளதாக ஜனாதிபதி திருப்தியுற்றால், அவர் பிரதேசத்தின் எல்லா அதிகாரங்களையும் கையேற்று சபையைக் கலைக்கலாம்.

இவ்விதமாக (கலைப்பு தொடர்பாக) ஆக்கப்படும் பிரகடனம் அல்லது அப்பிரகடனத்திற்கான காரணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகளைப் பொறுத்தவரை – குடியரசின் இறைமைக்கும் ஒற்றுமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையோ, ஆயுதந்தாங்கிய கலவரத்தை அல்லது போராட்டத்தை ஊக்குவிக்கிறதான நிலைமையோ உண்மையாக ஏற்படும்பட்சத்தில் ஆட்சியைக் கலைப்பதென்பது நியாயமானதே. ஆனால் மத்திய, மாநில அரசுகளில் இருக்கும் கட்சிகள் எதிர்க்கட்சிகளாக இருக்கும் பட்சத்தில் மேற்சொன்ன இரு சந்தர்ப்பங்கள் உண்மையில் ஏற்படாதபோதும்கூட, சிறு விடயங்கள் பெரிதுபடுத்தப்பட்டு ஆட்சி கலைக்கப்பட வாய்ப்புண்டு.

இவை தவிர்ந்த ஏனைய மூன்று சூழ்நிலைகளும் மத்திய அரசு மிக இலகுவாகவே ஓர் மாநில அரசைக் கலைப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கிறது.

தொடர்ச்சி 9

படிப்பகம்

www.padippakam.com



# எந்த நாட்டிலும் அனுபவிக்காத அவலம் சொந்த நாட்டில்

அவுஸ்திரேலியாவும் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் இலங்கையில் விளையாட மறுத்தபோது இந்திய, பாகிஸ்தானிய அணிகளிலிருந்து வீரர்கள் ஒன்றாக இணைந்து இலங்கை அணியுடன் நட்புறவு விளையாட்டொன்றை நடாத்தினர்.

கொழும்பில் இது நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வடக்கில் வவுனியா ரயில் நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளும், ரயில் ஏறுவதற்கு வந்த பயணிகளும் ட்ரக் வண்டிகளிலும், பஸ்களிலும் ஏற்றப்பட்டு வவுனியா காமினி மகாவித்தியாலயத்திற்கு பொலிசாரினால் ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டனர்.

கிரிக்கட் விளையாட்டிற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய வீரர்கள் மாலை மரியாதையுடன் அமைச்சர்கள், பிரதியமைச்சர்களால் வரவேற்கப்



பட்டுக் கொண்டிருந்த வேளையில் இங்கு ரயில் நிலையத்தில் கைது நடவடிக்கை ஆரம்பித்து விட்டது. இந்தக் கைது நடவடிக்கையில் கூட ஒரு சமதர்மத்தைக் காண முடிந்தது. பெண்கள் குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்கள் என்று எந்தப் பாரபட்சமும் காட்டப்படவில்லை. 78வயதான தள்ளாடும் மூதாட்டி ஒருவர் ட்ரக்கில் தூக்கி வைக்கப்பட்டார்.

வடபகுதி மக்களின் மரியாதையும் யாழ்ப்பாண வெங்காய, மிளகாய் பொதிகளின் மதிப்பும் ஒரே மாதிரியாக மாறிவிட்டதைப் போன்ற பிரமை ஏற்பட்டது.

## மனிதர் எனும் மதிப்பை பெறுவது எப்போது?

கிரிக்கட் விளையாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தீர்ப்பதில் முழுமூச்சாக செயற்பட்ட அரசு, நாட்டு மக்களில் ஒருபகுதியினர் அனுபவிக்கும் இன்னல்களை குறைப்பதற்கும் அதுபோல் முயலுமானால் நல்லது.

கொழும்பில் தாக்குதல்களை மேற்கொண்ட பயங்கரவாதிகள் தேடப்படுகிறார்கள். அவர்கள் இனங்காணப்பட வேண்டும். ஆனால் ஆயிரக்கணக்கில் பயணிகளைக் கைது செய்து வைத்துக் கொண்டு அவர்களைத் தேடுவது கும்மிருட்டில் வெளிச்சத்தைத் தேடும் செயலாகும்.

ஆயிரக்கணக்கான தமிழ்ப் பயணிகளின் மீது சந்தேகத்தின் நிழலை வீழ்த்தி தேடும் இந்த முறை பிரச்சினைகளை மேலும் சிக்கலடையச் செய்யும். பயங்கரவாதத்திற்கு உரமூட்டும் என்பதெல்லாம் ஏன்தான் இவ்வளவு கால அனுபவத்தில் எமது நாட்டின் சட்ட ஒழுங்குத் துறையினருக்குப் புரியாமல் போனது.

இந்தியாவிற்கோ, வேறு எந்த நாட்டிற்கோ ஈழத் தமிழர்கள் சென்றால் அங்கெல்லாம் இங்கு எதிர்நோக்கும் கெடுபிடிகளையெல்லாம் தமிழர்கள் அனுபவிப்பதில்லை. ஆனால் தமிழர்கள் சொந்த மண்ணில் வவுனியாவைத் தாண்டும்போது நரக வேதனையை அனுபவித்து விடுகிறார்கள்.

நொச்சிமோட்டை தாண்டி, தாண்டிக்குளம் வருபவர்கள் சில வேளைகளில் அருகிலுள்ள பாடசாலையொன்றில் தங்கவைக்கப்படுகிறார்கள். இரவு வேளையில் விசாரணை என்ற பெயரில் சட்டத்தின் பாதுகாவலர்களெனக் கருதப்படும் சிலர் விசாரணைக்கென இளம் பெண்களை அழைக்கிறார்கள். அவர்கள் நடந்துகொள்ளும் முறை பற்றி எந்த பெண்தான் வெளியில் சொல்வாள். ஆனாலும் கெடுபிடியின் உக்கிரம் சில விடயங்களை கசியச் செய்திருக்கிறது.

சொந்த இடத்திலிருந்து வேரோடு கிளப்பப்பட்டவர்கள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி ஒன்றில் வரவேற்கப்படும் முறையில், இத்தகைய கேவலமான நடவடிக்கைகளும் இருக்கின்றன என்பதனை அறியும்போது ஒருகணம் நெஞ்சு துணுக்குற்றுப் போகிறது.

## மக்களிடம் வெறுப்பேத்த புலிகளுக்கே பலம் ஏறும்

புலிகளுக்கு இசைவாகச் சிந்தித்து வாழ வேண்டிய சூழலிருந்து சிறிதளவு மூச்சுவிட அவகாசம் கிடைக்கும் என்பதை எதிர்பார்த்து வந்த பகுதியும் மூச்சுத்திணறலை ஏற்படுத்துவதாக அமைந்துவிட்டால் அவர்கள் எங்குதான் போவார்கள்.

யுத்தத்தில் வேரோடு பிடுங்கி எறியப்பட்டவர்கள் அகதிகளாகத் தன்னும் வாழ முடியாதென்றாகி விட்டால், அதைவிட துயரம் வேறொன்றும் இருக்க முடியாது.

யுத்தத்தினால் முழுதாகவே பாதிக்கப்பட்ட மக்களை பல்வேறு பிரச்சினைகள் வாட்டி வதைக்கின்றன. தொழில், கல்வி எதுவுமற்ற நிலையில் உடல், உள பாதிப்புகளுக்குள்ளானவர்கள், குறைந்தபட்ச தேவைகளை நிவர்த்திக்க, அவர்கள் நொச்சிமோட்டை தாண்ட வேண்டியிருக்கிறது. அவர்களுடன் சேர்ந்து புலிகளும் எல்லை தாண்டுகிறார்கள்.

மக்களை சொந்த இடங்களிலிருந்து வெளியேற நிர்ப்பந்தித்தவர்கள், அவர்கள் நிம்மதியாக தமது அத்தியாவசிய தேவைகளுக்கு பயணம் செய்ய முடியாத நிலவரத்தைத் தோற்றுவித்துள்ளார்கள்.

இன்று தென்பகுதியில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு இவர்கள் பிரதானமாகப் பொறுப்பாளிகள். கொழும்பில் நடந்த ஈவிரக்கமற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் தென்பகுதியில் வாழும் அத்தனை தமிழ் மக்களையும் பீதியின் நிழலில் வாழ வைத்துள்ளது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என பயத்தில் உறைந்து போயுள்ளார்கள்.

மக்களின் பாதுகாப்பிற்கும் சுதந்திரமான வாழ்க்கைக்கும் உத்தரவாதமளிக்க வேண்டிய அரசு, மக்களின் அவலங்களைக் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

வடபகுதி மக்கள் பிரயாணம் செய்ய முடியாதென்றால் பெரும்பாலான பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கெடுத்து, அவர்கள் வாழும் இடங்களிலோ அல்லது வவுனியாவிலோ பூர்த்தி செய்வதற்கான வழிவகைகளை உருவாக்க வேண்டும்.

* தமது பிள்ளைகளிடம், உற்றார் உறவினர்களிடம் பண உதவி பெற வருவோர்,
* தமது உறவினர்களின் வீடுகளில் வசிப்பதற்கு வருவோர்,
* அவசர சிகிச்சைகளுக்காக வருவோர்,
* தொழில் நிமித்தம் வருவோர்,
* பல்கலைக்கழகம், நேர்முகப்பரீட்சை, வெளிநாட்டுப் பயணம் ஆகியவற்றுக்காக வருவோர்,
* மரணச் சடங்குகளுக்கு வருவோர்,
* இன்னும் இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளுக்காக வருவோர்.....

என வருவோர் பலதிறத்தார்.

இவர்களில் ஒரு பிரிவினர் பயணம் செய்துதான் ஆகவேண்டும். இன்னுமொரு கணிசமான பகுதியினருக்கு மாற்று வழிகளை ஒழுங்கு செய்தால்... பிரச்சினைகளை இல்லாமல் செய்ய முடியாவிட்டாலும் குறைக்கவாவது செய்யலாம்.

* தொலைபேசி வசதி,
* பணத்தை சொந்த இடத்திலோ அல்லது வவுனியாவில் வைத்தோ பெறுவதற்கான வசதிகள்.

இவை செய்து கொடுக்கப்பட்டால் மக்களிடம் உருவாகி வரும் வெறுப்பை இல்லாமல் செய்துவிட முடியாவிட்டாலும், குறைக்க முடியும்.

## நாடுகளுக்குள் இணக்கம் நமக்குள் முடியாதா?

சராசரியாக வவுனியா வேப்பங்குளம் முகாமிலும் ரயில் நிலையத்திற்கருகாமையில் உள்ள முகாமிலும் 1200இற்கு மேற்பட்டவர்கள் தங்கி நிற்கும்போது, நாளாந்தம் 50 பேரிலிருந்து 100 பேர்வரை பிற இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

வடபகுதியிலிருந்து தமது சொந்த ஊர்களுக்குச் செல்பவர்களும் இதில் அடக்கம். சொந்த ஊர்களுக்குச் செல்பவர்களை எவ்வாறெனினும் அனுமதித்துத்தானே ஆக வேண்டும்.

கிரிக்கட் விளையாட்டு, தென்னாசிய நல்லிணக்கத்திற்கு ஒரு நம்பிக்கைதரும் செயற்பாடாக அமைந்தது உண்மையே. அதேபோல், இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசியல் ரீதியான மனிதாபிமான ரீதியான முன்முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த முயற்சிகள் மாத்திரம் தான் இந்த நாட்டை சுபிட்சத்தை நோக்கி வழி நடத்த உதவும்.

**- எஸ். திருநாவுக்கரசு**

---



உளவியல் ரீதியான போர் இது.
"நீங்கள் எங்களுக்காகச் சாகுங்கள்"
என்கிறார்கள் வயதானவர்கள்.
இளைஞர்களை தங்களுக்காகச் சாகச்
சொல்கிறார்கள். இதற்கு எங்கள் பதில்:
ராணுவத்தில் சேருவதற்கான
அட்டைகளைக் கொளுத்துவதும்,
ராணுவத்தில் சேராமல் ஏமாற்றுவதும்!
"நாங்கள் உங்களுக்காகச்
சாகமாட்டோம்!"
- வியட்நாம் போரின்போது அமெரிக்க
ஹிப்பிகளின் பிரகடனம்.

---

எமது கடந்தகால அனுபவங்களில் இருந்து நிவாரண, சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை சரியான குறிக்கோளின்றி மேற்கொள்வது, மக்கள் தங்கிவாழும் நிலையை அதிகரிக்க செய்யும் என கண்டுள்ளோம். உக்கிரமடைந்த யுத்த சூழ்நிலை காரணமாக உதவி அவசியமானோரின் எண்ணிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ள வேளையில், நீண்டகால அபிவிருத்திக் குறிக்கோளின்றி நிவாரண-புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது, மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை விரயமாக்குவதுடன், சமூகத்திலுள்ள அகதிகளான ஒரு சாராரை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தாமல் சமூகத்திற்கு சுமை ஏற்படுத்துவதுமாகும்.
ஆகவே, எமக்கு முன்னால் உள்ள பிரச்சினை, பிரச்சினையிலே வாழ்வது அல்ல, மாறாக பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களை முடிந்த அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் அணிதிரட்டி சுயசார்பு நிலைக்கு இட்டுச் செல்வதுடன், பிரச்சினைக்கு அடிப்படையான காரணங்களை இனம்கண்டு அவற்றை நீக்குவதற்காக செயல்பட வேண்டும். மக்களின் சுயசார்பை ஏற்படுத்துவதென்பது, பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புக்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி, அவர்கள் பங்கேற்று சுதந்திரமாக செயல்படக்கூடிய நிலையை ஏற்படுத்துவதுமாகும்.
இவ்வாறான அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கான முக்கிய குறிக்கோள், பாதிக்கப்பட்ட மக்கள், தமக்கு விரோதமான சமூக விரோத நிகழ்வுப் போக்குகளுக்கும் அமைப்புக்களுக்கும் முகம் கொடுக்க வல்லவர்களாக்குவதாகும்.
இவ் அமைப்புக்களின் குணாம்சம் புதிய சமுதாயத்திற்கான பெறுமானங்களை கொண்டிருத்தல் அவசியம். அநீதிக்கெதிரான போராட்டத்தின் விளைவு நீதியை நிலைநிறுத்துவதாக அமைய வேண்டும். ஏனெனில், ஓர் அநீதிக் கெதிரான போராட்டம் மற்றுமொரு அநீதிக்கு இட்டுச் செல்வதை வரலாற்றின் பல்வேறு சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாகவுள்ளது.
மேலும் இவ் அமைப்புக்களுக்கூடாக மனித, பொருள் வளங்கள் திரட்டப்படுவதன் மூலமாக மக்களை ஆக்கபூர்வமாக அபிவிருத்தியில் பங்காளர்களாக்குவதுடன், திட்டமிடல் கண்காணிப்பு செயல்பாடுகளில் பங்கேற்க வைக்க முடியும். அத்துடன் அவர்கள் தமது இக்கட்டான நிலையிலும் கூட அணிதிரட்டப்பட்ட வளங்களுடன், பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் ஸ்தாபனத்தின் சக்தியை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். இந்நிகழ்வுப் போக்கினை எமது செயற்பாடுகள் நடைபெறும் சகல இடங்களிலும் ஏற்படுத்தாமல், மக்களை ஸ்தாபனங்களில் ஐக்கியப்படுத்தாமல், அவற்றிற்கு வலுவூட்டாமல், மக்களின் கட்டுப்பாட்டை ஏற்படுத்தாமல், சுயசார்பை பற்றி பேசுவது வளங்களை விரயமாக்கி சமூகத்தில் தீய சக்திகள் வளர்வதற்கு இடமளிப்பதுமாகும்.

- சமூக அபிவிருத்தி, நிவாரண, புனர்வாழ்வு திட்டங்களை செயல்படுத்திவரும் அரச சார்பற்ற நிறுவனமான "ஃபோரூட்" நிறுவனத்தின் காலாண்டு இதழிலிருந்து....

படிப்பகம்

www.padippakam.com



## அதிகாரப் பகிர்வு....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் மாநிலஅரசு அரசியலமைப்பை மீறும் நடவடிக்கையில் ஈடுபடும் பட்சத்தில் அது உச்ச நீதிமன்றத்தினூடாக தீர்க்கப்படலாம்.

பொதுமக்களின் ஒழுங்கு ஆயுதந் தாங்கிய போராட்டத்தால் அச்சுறுத்தப்படும் சூழ்நிலையில், மாநில காவல்துறை அதனைக் கவனிக்கும். அதற்கு பலம் போதாவிட்டால் மாநில அரசு மத்திய அரசின் உதவியைக் கோருவதும், மாநில காவல்துறைக்கு ஒத்துழைப்புக் கொடுத்து அத்தகையகுழுவைஅடக்குவதுமே முறையானதாகும். மாநில அரசால் அறவே முடியாது என முதல்வர் கவர்னருக்கு அறிவிக்கும்பட்சத்திலேயே ஜனாதிபதி கலைக்க வேண்டும். மாறாக, ஆயுதந்தாங்கிய சில சமூக விரோத சக்திகளின் செயற்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், அதை மாநில அரசாங்கம் கட்டுப்படுத்தும் ஆற்றலும் இருந்தாலும் கூட, மாநில சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தவிட்டதாக பெரிதுபடுத்தப்பட்டு ஆட்சி கலைக்கப்பட இது வழிவகுக்கிறது.

பாரதூரமான உள்ளூர்க் கலவரங்கள் ஏற்பட்டாலும், அப்பிராந்தியசபை கலைக்கப் படலாம் என்பதும் நகல் அரசியல் திட்டத்தின் ஓர் அம்சமாகும். இது மாநிலஅரசின் ஸ்திரத் தன்மையை மிகவும் பலவீனமாக்கும் அம்சமாகும். சாதாரண கோஷ்டிச் சண்டைகளோ, சாதிச்சண்டைகளோ கூட மாநில அரசைக் கலைக்க வேண்டும் என்பதற்காக பெரிதுபடுத் தப்பட்டு கலைக்கப்படலாம்.

மேற்கண்ட விடயங்களில் மத்திய அரசு தவறான விளக்கத்தின் அடிப்படையில் அல்லது உண்மைக்குப் புறம்பான வகையில் பொய் விள்க்கமளித்து மாநில அரசைக் கலைப்பதற்கெதிராக, மாநில அரசு தனது நியாயங்களை வெளியிடவோ நியாயம் கேட்கவோ முடியாது; கலைப்பு தொடர்பாக நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது. இது மீண்டும் ஜனாதிபதியின் கையில் அதிகாரங்களைக் குவிக்கும் தன்மையையும் மத்திய அரசுடன் நட்பாக இல்லாத மாநில அரசுகள் எந்த நேரத்திலும் கவிழ்க்கப்படுவதற்கான வழியையும் ஏற்படுத்துகிறது.

இதற்குப் பதிலாக அரசியல் சாசனத்திற்கு முரணாகவோ அல்லது மேற்கூறப்பட்டவாறான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு கருதும் பட்சத்தில் பிராந்திய அரசைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்து, என்ன காரணங்களுக்காக இச்சபை கலைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை, மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும். உச்ச நீதிமன்றம் பிராந்திய அரசிடம் அது தொடர்பாக விளக்கத்தைப் பெற்று, அதன் பிரகாரம் ஏற்படும் தீர்ப்புக்கமையவே ஜனாதிபதி கலைப்பு தொடர்பான இறுதி முடிவை மேற்கொள்ள வேண்டும்.

### சட்டம் ஒழுங்கு

இந்திய மாநிலங்களைப் பொறுத்தவரை, மிக முக்கியமான பலவிடயங்கள் மாநில அரசுகளின் அதிகாரத்துக்குட்பட்டதாக உள்ளது. முக்கியமாக சட்டம்–ஒழுங்கு, காணி, காணிப்பங்கீடு, கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், போன்ற பல துறைகளை நாம் குறிப்பிடலாம். இப்படியான விடயங்களில் மாநிலஅரசு தனது மூழுஅதிகாரத்தையும் இவற்றின்மேல் கொண்டுள்ளது. ஆனால் இலங்கையில் தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள சட்டவரைபை நோக்கினால், மேற்கண்ட விடயங்களில் மத்திய அரசு தனது பிடிமானத்தைக் கொண்டுள்ளதையே காணமுடிகின்றது.

பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை எடுத்துக்கொண்டால், முக்கிய துறையான சட்டம்–ஒழுங்கு மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டபோதும், இதில் மத்தியஅரசு பெருமளவு செல்வாக்குச் செலுத்தக் கூடிய வகையிலேயே இந்த நகல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் பிராந்தியளவிலான உயரதிகாரியாக கமிஷனர் இருப்பார். அவர் அப்பிராந்திய முதல்வரால் நியமிக்கப் படுவார் எனினும், மத்திய அரசின் அரசியல் யாப்புச் சபையினால் நியமிக்கப்படும் மேலும் இருவரைக் கொண்ட கமிஷனாகவே அது செயல்படும்.

இக்கமிஷனே அத்துறைக்கான ஊழியர்களை எடுத்தல், இடமாற்றல், நீக்கல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும். கமிஷனின் 3 உறுப்பினர்களில் 2 பேர் மத்திய அரசால் நியமிக்கப்படுவதானது, முன்னர் குறிப்பிட்டது போலவே மத்திய, மாநில அரசிலுள்ள கட்சிகள் எதிர்க்கட்சிகளாக இருக்கும்பட்சத்தில் இக்கமிஷன்களில் மத்திய அரசின் அனாவசியத் தலையீடுகட்கும், அதன்மூலம் பிராந்திய அரசின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படவும், மத்திய–மாநில உறவுகள் சீர்கெடவும் இவை வழிவகுக்கும் என்பதுடன், மாநில சட்டம்–ஒழுங்கு நிர்வாகம் பெருமளவுக்குப் பாதிக்கப் படவும் இது வழிவகுக்கும்.

ஓர் பிராந்தியத்தில் எற்படக்கூடிய பல குற்றச் செயல்களை விசாரிக்கும் உரிமையற்ற ஓர் சட்டம்–ஒழுங்கு நிர்வாகமாகவே இது உள்ளது. மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட விசாரணைகளையும் மேற்கொள்ளமுடியாது. உதாரணமாக, பாராளுமன்றத்தில் வேலை செய்யும் அலுவலர்கள் ஏதாவது குற்றமிழைத்தாலோ, அன்றி ஜனாதிபதி அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் ஏதாவது குற்றமிழைத்தாலோ, அல்லது மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட 63க்கு மேற்பட்ட விடயங்களில் யாரும் குற்றமிழைத்தாலோ, அல்லது ஒரு பிராந்தியத்தில் இருக்கக்கூடிய முப்படையினர் குற்றமிழைத்தாலோ, இவற்றை எல்லாம் தேசியப் பொலிஸ்தான் விசாரணைக் குட்படுத்த முடியும். இதன் கருத்து ஒவ்வொரு பிராந்தியங்களிலும், பிராந்திய பொலீசுக்கு சமாந்தரமாக தேசியப் பொலீசின் பணிகளும் இருக்குமென்பதே.

### அரசியல் யாப்பு சபை

இதற்கு மேலாக பொதுநிர்வாகத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசின் அரசியல் யாப்புச் சபையால் ஆளுனரின் ஆலோசனையுடன் நியமிக்கப்படும் அதிகாரிகளே பிராந்திய நிர்வாகத்திற்கான ஆளெடுப்பு, இடமாற்றம், நீக்கம் என்பவற்றை மேற்கொள்வர். இங்கு பிராந்திய நிர்வாக சேவைத்துறை விடயத்தில் பிராந்திய முதல்வரும் மந்திரிசபையும் வெறும் பொம்மைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் மத்திய அரசுக்கு விசுவாசமானவர்களாகவும், அரசியல் யாப்பு சபைக்கு பதில்சொல்லக் கடமைப் பட்டவர்களாகவுமே உண்மையில் இருக்கும்; இவற்றுக்கு மேலாக பிராந்திய முதல்வர், மந்திரிசபையைவிட உயர்ந்த அதிகாரம் படைத்தவர்களாகவே செயற்பட வாய்ப்புண்டு. இன்னோர்வகையில், பிராந்திய அரசுக்கு சமாந்தரமாக இன்னொரு அரசு செயற்படுவது போன்று இருக்கும். மத்திய அரசு இவ் அதிகாரிகள் மூலம் மாநில அரசின் நிர்வாகத்தைத் தனது பிடிக்குள் வைத்திருக்கும். மாநில அரச நிர்வாகம் இரு தலைமைகளின் கீழ் செயற்பட முடியாது குழப்படையும்.

இதுபோன்றே நீதித்துறையும் மத்திய அரசின் உறுதியான பிடியிலேயே உள்ளது.

ஓர் மாநில அரசு ஸ்திரமான ஆட்சியையும் தடையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளையும் செயற்படுத்த வேண்டுமெனின், பிராந்தியத திற்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில் அவை பூரண அதிகாரத்தைக் கொண்டவையாக இருக்க வேண்டும்.

இதற்கு, மத்தியில்–அரசியல் யாப்புச் சபையானது தேசிய பொலிஸ்ஆணைக்குழு, தேசிய நிர்வாக சேவைக்குழு, தேசிய நீதிச் சேவை ஆணைக்குழு போன்றவற்றை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது போல், மாநில அரசியல் யாப்பு சபை ஒன்று அமைக்கப்பட்டு, அதுவே மேற்கண்ட துறைகட்கான தலைமையைத் தெரிவுசெய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும். மாறாக, மத்திய அரசியல் யாப்புச் சபையே மாநில ஆணைக் குழுக்களை நியமிப்பது மாநில அரசுகளின் ஸ்திரமான செயற்பாட்டுக்கு குந்தகமாகவே அமையும். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குப் பதிலாக அதற்குத் தொடர்ந்து உயிரூட்டும் கருவிகளாகவே இருக்கும்.

இதனைப் போன்றே காணிப்பங்கீட்டிலும் கூட மத்திய அரசு விரும்பினால் எப்பிராந்தியங்களிலும் தனக்குத் தேவையான காணியைப் பெற்றுக் கொள்ளலாம். மத்திய அரசு இவ்விடயம் தொடர்பாக பிராந்திய அரசுடன் கலந்துரையாடி இதனைப் பெறலாம் எனக் குறிப்பிட்ட பொழுதும், இங்கு கலந்துரையாடல் என்பது வெறும் கண்துடைப்புக்காக சேர்க்கப்பட்ட வார்த்தை ஜாலமே.

### சட்ட மா அதிபர்

இதனைப் போன்றே பிராந்திய சட்டமா அதிபர் என்ற வடிவமும் உள்ளது. பிராந்தியச் சட்ட மா அதிபரையும் ஆளுநரே தெரிவு செய்வார். இவர் ஆளுநருக்கும், முதல்வருக்கும் சட்ட மா அதிபராக்ச் செயற்படுவார் எனக் கூறப்பட்டுள்ளதுடன், பிராந்திய சபையில் சட்டமாக்கப்படும் எந்தவிடயமும் இலங்கை அரசியல் சாசனத்துக்கு முரணாக இருந்தால் இவர் உச்ச நீதிமன்றத்தில் அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வார்.

இங்கு முதல்வருக்கும் ஆளுநருக்கும் ஆலோசனை கூற பிராந்திய சட்ட மா அதிபர் ஒருவர் தேவைஎன்பது உண்மை. ஆனால் அவர் மத்திய அரசால் அனுப்பப்பட்ட ஓர் துப்பறிவாளராக இருக்காமல், பிராந்திய சட்டவாக்கங்களை சரியான முறையில் உருவாக்கிச் செல்ல ஆலோசனை கூறும் ஓர் அலுவலராகவே அவர் இருக்க வேண்டும். எனவே அவரை நியமிக்கும்அதிகாரமும்கூட முதலமைச்சருக்கே வழங்கப்பட வேண்டும்.

பிராந்தியத்தில் உருவாக்கப்படும் ஓர் சட்ட மூலம் பிழையென இந்த நாட்டின் எந்த ஓர் குடிமகன் கருதினாலும், அவர்கள் அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். இதனை பிராந்திய சட்ட மா அதிபரிடம்தான் விட வேண்டும் என்ற எந்தத் தேவையுமில்லை.

இவைதவிர பிராந்தியங்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல அதிகாரங்களை மத்திய அரசு தன்னகத்தே கொண்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி உயர்கல்வி, சுகாதாரம் போன்றவற்றை நாம் உதாரணங்களாக எடுத்துக்கொள்ளலாம். தேசியப் பல்கலைக் கழகங்கள் என்ற போர்வையிலும், பல்கலைக் கழகங்களும் முக்கியமான வைத்தியசாலைகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றது. இவை யாவும் மாநிலங்களின் அதிகாரத்திற்குள் கொண்டு வரப்படலாம்.

இவைதவிர மாநிலங்கட்கிடையேயான போக்குவரத்து, மாநிலங்கட்கிடையேயான நீர்ப்பாசன ஆறுகள், மாநிலங்கட்கிடையேயான உணவுவிநியோகம் போன்றவை தெளிவான முறையில் இன்னும் வரையப்படாமலேயே உள்ளது. மொத்தத்தில் புதிய அரசியல் வரைவில் உள்ள பல விடயங்கள், மறுசீரமைக்கப்பட்டும், செழுமைப்படுத்தப்பட வேண்டியும் உள்ளது.

### வட-கிழக்கு இணைப்பு


இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகார அலகு என்ற விடயம் தொடர்பாக எதுவும் குறிப்பட்டு சொல்லப்படவில்லை. இந்திய–இலங்கை ஒப்பந்தத்தினூடு உருவாக்கப்பட்ட 'வட–கிழக்கு இணைந்த மாகாணம்' என்ற விடயம் ஏற்கனவே அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்ட ஓர் விடயமாகும். ஆனால் அது தற்காலிகமானது என்ற நிலையிலேயே உள்ளது. தமிழ் மக்கள் கேட்பதெல்லாம் தற்காலிகமான இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதே.

ஆனால் அதனை நிரந்தரமாக்காமல் வட–கிழக்கு துண்டுகளாகப் பிரிக்கப்படும் பட்சத்தில், இன்று நடைபெற்றுவரும் முழு நடவடிக்கைகளும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும். இந்திய இலங்கை ஒப்பந்தம் என்னென்ன காரணங்களுக்காக தோல்வியில் முடிந்தது என்பதைப் பார்த்து அது நிவர்த்தி செய்யப்பட வேண்டுமே தவிர, அதிலும் விட மோசமான முறையில் ஆலோசனைகள் வருமாயின், அதனால் எந்தவித பிரயோசனமும் இல்லாமல் போய்விடும் என்பதே உண்மை.

அந்த அடிப்படையில் பார்த்தால் வட–கிழக்கு இணைந்த ஓர் மாகாணமாக இருக்க வேண்டும் என்பதை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததை அவதானிக்கலாம். முக்கியமாக இவ்வடிப்படையில்தான் வட–கிழக்கு மாகாணம் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்டது. இதை இல்லாமல் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபடுமாயின்

தொடர்ச்சி.... பக். 12

## குறுக்கெழுத்துப் போட்டி-21



### இடமிருந்து வலம்

1. குடிநீருக்குள் சயனைட் என்று கொழும்பைக் கலக்கியது.
3. தொழில்முறைக் கர்நாடக இசைப் பாடகர்.
7. பெரும்பாலும் முகத்தில் உண்டாவது. (த.கீ.)
9. செடியில் புதிதாகத் தோன்றிய இலைகள்.
10. வடக்கே இன்று கடைசிப் புகைமிரத நிலையம்.
13. நிலா.
14. அதிகம்.
15. கெட்ட உள்நோக்கம்.
16. ஐம்புலனுறுப்புகளில் ஒன்று. (குழம்பி)
17. ஆவி போனபின் கூடு.
19. சிற்றூர்.
21. தேவலோக மங்கை. (தலைகீழ்)
24. சிந்தி. (தலைகீழ்)
26. விளையாட்டொன்று, கடைசி எழுத்தில்லாமல்.
27. பயம்.
28. நவரசங்களில் ஒன்று.
31. காய்ச்சலுக்கு ஆஸ்பத்திரியில் குளிசையோடு தரப்படுவது, கடைசி எழுத்தில்லாமல்.
32. மங்கள வாத்தியம்.
33. இசைவு.
34. பசிக்கிற போது --. (தலைகீழ்)

### மேலிருந்து கீழ்

1. கிழக்கில் ஓர் ஊர்.
2. கடல் மீன் ஒன்று.
4. பலவகைப் பூக்களைத் தொடுத்த சரம்.
5. காற்று.
6. தலை காக்கும்.
8. பகிர்.
11. ஏமாற்றித் தப்பும் செயல்.
12. ஒரு பிடி உணவு. (குழம்பி)
17. காலத்திற்கேற்ற புத்திச் செயல்.
18. வெளிப்படை. (தலைகீழ்)
20. பிறக்கும் நேரத்தில் ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரன் இருக்கும் இடம் அல்லது அதிர்ஷ்டம்.
22. வகை. (தலைகீழ்)
23. குமில்.
25. சொறியச் சொல்லும். (தலைகீழ்)
27. சேறு. (தலைகீழ்)
29. அத்தாட்சி.
30. பூவைத் தாங்குவது.
32. இனிய ஓசை. கடைசி எழுத்தில்லாமல்.

### கு.எ.போட்டி-20 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. சூரியகிரணம்
5. நதி
7. சாயாவனம்
9. சுரங்கம்
12. பசலை
13. மஞ்சம்
14. சகி 16. கரி
17. கேசம்
18. மரியாதை
20. கம்பசூத்திரம்
22. தம்பி
23. திதி 24. அடவி
27. (இ)ரத்தினம்
28. திமிங்கலம்
31. பன்மை
32. உமை 33. திரி

**மேலிருந்து கீழ்:**

1. சூட்சமம்
2. கிரகம்
3. சாண(ம்)
4. யாம்
5. தினசரி
6. நம்பகம்
8. வலை 10. ரஞ்சகம்
11. சங்கேதம்
14. சரித்திரம்
15. தியாகி
18. மருதி
19. பதிவிரதை
21. கன்னடம்
22. பிரதிமை
25. அம்மை 26. அகதி
29. உமி 30. (பு)லரி

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

மா. சுகந்தினி
ஜம்பெட்டா வீதி,
கொழும்பு-13.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. க. ஆரூரன்,
   உவர்மலை, திருகோணமலை.
2. ஏ. கே. வாசுகி,
   தெகிவளை.
3. செ. சுதாகரன்,
   சிவசக்தி ஃபாமசி, வவுனியா.
4. எஸ். எம். எஸ். அலீம்,
   கல்முனை.
5. கு. அழகேஸ்வரி,
   மன்னார் வீதி, வவுனியா.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

புதிய கண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.

www.padippakam.com





# தமிழக வாரப் பத்திரிகையான துக்ளக்கின் 26வது ஆண்டு விழா மேடையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஐச் சேர்ந்த தோழர் வளவன் கேட்ட கேள்வியும், அதற்கு துக்ளக் ஆசிரியர் சோ அவர்கள் அளித்த பதிலும்....

**வளவன்:** இலங்கை-இந்திய ஒப்பந்தம் செயல்பட முடியாமல் போனது தொடர்பாகச் சில கேள்விகள். இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட போது, இலங்கையிலுள்ள சில தமிழர் கட்சிகளுக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தன.

குறிப்பாக, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இந்தியஅரசோடு இணைந்து நின்று செயல்பட்ட, மறைந்த பத்மநாபா அவர்களுடைய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்குச் சில கருத்துவேறுபாடுகள் இருந்தன.

இது தொடர்பாக ராஜீவ்காந்தி அவர்களிடம் வினவியபோது, 'இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற இலங்கை அரசு மறுக்குமானால், அதற்குச் சரியான விதத்தில் செயல்படுவோம்' என்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருந்தார்.

இந்த ஒப்பந்தம் நிறைவேறாமல் போனதற்கு புலிகள் ஒரு முக்கிய காரணம் என்பது உண்மை. அதே சமயம், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக, இலங்கையிலுள்ள ஒருபகுதி மக்கள் இந்திய அரசுடன் இணைந்து செயல்பட்டனர் என்பதும் உண்மை.

இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து வாபஸ் பெறக் காரணம் புலிகள் மட்டுமல்ல. இதற்கு பிரேமதாசா எடுத்த முடிவும் ஒரு காரணம். இரண்டு நாடுகளுக்கிடையே செய்து கொண்ட ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறியது. அதை இந்தியாவும் ஏற்றுக்கொண்டது. இது எந்தவகையில் நியாயம்?

இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் புலிகள் அல்ல. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியை ஆராய்கிறபோது சிங்கள இனவாதத்திற்கும், இந்தப் பிராந்தியத்தில் இருக்கிற ஒரு வல்லரசுக்கும் நடந்த போரில், சிங்கள இனவாதம் வெற்றியடைந்து விட்டது என்பதுதான் உண்மை. அதற்குப் புலிகள் கருவியாகப் பயன்பட்டார்கள். ஒரு நாட்டின் அரசு மாறியபோது, அது செய்துகொண்ட ஒப்பந்தம் கைவிடப்படுவது சரியா, நியாயம்தானா?

அடுத்ததாக, தமிழகத்தில் இரண்டு அரசியல் கூறுகள் காணப்படுகின்றன. ஒன்று ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் இங்கு எழுந்துள்ள புலிகளுக்கு எதிரான வாதம்; மற்றொன்று புலிகள் என்ன செய்தாலும் அவர்களுக்குத் துதிபாடுகிற ஒரு கூட்டம்.

இந்த இரண்டு வாதங்களுக்கிடையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையே அடிபட்டுப் போய்விட்டது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசினாலே, அவர்களைப் புலிகள் என்று தேசியக் கட்சிகள் கருதுகிற நிலை இருப்பதை நாங்கள் வேதனையோடு பார்க்கிறோம்.

இந்த நிலையில், ஆசிரியரின் நிலைப்பாடும் சரியானதாகத் தெரியவில்லை. ஒரு தலையங்கத்தில் அவர், இலங்கை அரசு உதவி கோரினால்தான் இந்தியா தலையிட வேண்டும் என்று எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாண யுத்தத்தினால் ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்கள், அகதிகளாக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்பது பெரும்பாலான இலங்கைத் தமிழர்களுடைய ஆசையாக இருக்கிறது. இதையெல்லாம் ஆசிரியர் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இந்த நாட்டு அரசியல் நான் பேசக்கூடாத விஷயம். உங்களுக்கு இங்குள்ள விஷயங்கள் பூதாகாரமாகத் தெரியலாம். ஆனால், எங்களைப் பொறுத்தவரை, இந்தப் பிராந்தியத்திலேயே இருக்கிற ஒரே ஜனநாயக நாடு இந்தியாதான். இந்த ஜனநாயகம் தழைப்பதற்கு துக்ளக் வாசகர்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சோ:** இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில், ராஜீவ் காந்தியின் யோசனையை ஏற்று முழு ஒத்துழைப்பு கொடுத்த இயக்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அந்த இயக்கத்தைக் கவனிக்காமல் விட்டுவிடுவது மிகவும் தவறு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் இந்தமாற்றம் எப்போது வந்தது? வி.பி.சிங் ஆட்சிக்கு வந்தார். கருணாநிதியின் செல்வாக்கு மத்திய அரசில் கூடியது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பிரேமதாசா, வி.பி.சிங், கருணாநிதி, பிரபாகரன் இவர்கள் நான்கு பேரும் சேர்ந்துதான் குட்டிச்சுவராக்கினார்கள். அப்போது பிரபாகரன் என்ன சொன்னார்? 'நாங்களும் சிங்களவர்களும் சகோதரர்கள். என்ன வேண்டுமானாலும் செய்து கொள்வோம். இதைக் கேட்பதற்கு அந்நியர்களான இந்தியர்கள் யார்?' என்று கேட்டார்.

அப்படிப்பட்ட பிரபாகரனுக்கு உதவி செய்ய வேண்டும் என்றுதான் இங்கே கூக்குரல் இடுகிறார்கள்.

இந்தியர்களை அந்நியர்கள் என்று வர்ணித்தவர் பிரபாகரன். அவரைத்தான் 'ரத்தத்தின் ரத்தம்', 'உடன்பிறப்பு' என்று இங்கே வர்ணிக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றுதான் பத்திரிகையில் மீண்டும் மீண்டும் எழுதியிருக்கிறேன். கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன்.

இப்போது திரும்பவும் இந்தியா உதவ வேண்டும் என்று ஈ.பி.ஆர். எல்.எஃப். வளவன் போன்றவர்கள் கேட்கிறார்கள்.

ஆனால் இந்திய அரசின் நிலையை நினைத்துப் பாருங்கள்.

நமது ராணுவம் அங்கே சென்றது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால், பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கே செயல்பட நேர்ந்தது.

'எங்களை கைகளைக் கட்டிக் கொண்டு வேலை பார்க்க வேண்டும் என்கிறீர்கள். அது எங்களால் எப்படி முடியும்?' என்று இந்திய ராணுவ கமாண்டரே கேட்டார். அதனாலேயே அவர்களால் சரியாக செயல்பட முடியாமல் போயிற்று.

அப்படியெல்லாம் செயல்பட்டும் கூட யாழ்ப்பாண மக்கள் இந்திய உதவிக்கு நன்றி காட்டவில்லை என்பது வருந்தத்தக்க ஒரு விஷயம்.

இதை நீங்கள் (வளவன்) மறுக்கலாம். ஆனால் அப்போது பயத்தினாலோ, வேறு எதனாலோ புலிகளுடன் சேர்ந்து கொண்டு இந்தியாவுக்கு விரோதமாக யாழ்ப்பாணத்து மக்கள் செயல்பட்டனர்.

இந்தியா அவ்வளவு பணம் செலவுசெய்து ராணுவத்தை அங்கே அனுப்பி, பல உயிர்களை இழந்து கண்ட பலன்-கெட்ட பெயர் ஒன்றுதான். அப்படியிருக்கும்போது ஒரு அரசு எந்த முகத்தை வைத்துக் கொண்டு இராணுவத்தை, 'இன்னொரு தடவை அங்கே செல்' என்று கூற முடியும்? 'ஏற்கனவே போய் பட்டதெல்லாம் போதாதா?' என்று ராணுவத்தினர் கேட்க மாட்டார்களா?

நரசிம்மராவ் அந்த மாதிரி முடிவு எடுத்தாரென்றால் மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம், 'முன்பு அனுப்பி அவமானப்பட்டது போதாதா? இன்னொரு முறை எதற்கு?' என்று கேட்க மாட்டார்களா? அந்த நிலையை இந்தியாவிற்கு உண்டு பண்ணியது யார்? விலகி நிற்க வேண்டிய அளவிற்கு ஒரு நிர்பந்தத்தை இந்தியாவிற்குத் தோற்றுவித்தது யார்? யாழ்ப்பாணத்து மக்களும், பிரபாகரனும்தானே? இங்கேயிருக்கிற எந்த தேசியச் சக்திகளும் அதைச் செய்யவில்லையே?

இங்கே இருக்கிற புலிகள் ஆதரவாளர்கள் அப்போது இந்திய விரோதப் பிரச்சாரம் செய்தார்கள். இந்திய ராணுவம் பெரும்பான்மையான கற்பழிப்புகளை நடத்தியதாகக் கதைகட்டிப் பிரச்சாரம் செய்தார்கள். அதன்மூலம் இந்திய ராணுவத்தின் மீது வெறுப்பை இங்கே தோற்றுவித்தார்கள். மற்றபடி அந்த ஒப்பந்தத்தை ஆதரித்தவர்கள் எல்லோருமே யாழ்ப்பாணத்து மக்களுக்கு இந்தத் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்றுதான் நினைத்தார்கள்.

> விலகி நிற்க வேண்டிய அளவிற்கு ஒரு நிர்ப்பந்தத்தை இந்தியாவிற்குத் தோற்றுவித்தது யார்? யாழ்ப்பாணத்து மக்களும், பிரபாகரனும்தானே? இங்கேயிருக்கிற எந்த தேசியச் சக்திகளும் அதைச் செய்யவில்லையே? இந்தியாவிற்கு இதில் கடமையிருக்கிறது. உண்மை. ஆனால், இந்தப் பிரச்சினையில் இந்தியா மும்முரமாக இறங்கும் அளவுக்கு, உங்கள் மக்கள் இந்தியாவை வைக்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.



இவ்வளவு நடந்த பிறகும் கூட நான் என்ன நினைக்கிறேன் என்றால், அந்த ஜனங்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருக்கலாம். அங்கே மின்சாரம் கிடையாது. தண்ணீர் கிடையாது. புலிகளின் மிரட்டல்களுக்கெல்லாம் பயந்து கொண்டிருக்க வேண்டும். சொத்துக்களைத் தந்துவிட வேண்டும். வெளிநாட்டிலிருப்பவர், தங்களுக்கு பணம் அனுப்பவில்லையென்றால், அவருடைய உறவினர் இங்கே பலியாக வேண்டும். இப்படியெல்லாம் புலிகள் அங்கே மக்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கம் இலங்கை இராணுவத்தின் தாக்குதல். இத்தனைக்கும் நடுவில் அவர்கள் வாழ வேண்டியிருக்கிறது. மிகப் பரிதாபகரமான, துக்ககரமான வாழ்வு. எந்தச் சமுதாயத்திற்கும் இந்தத் துன்பம் சம்பவிக்கக் கூடாது.

அதற்கு இந்தியா உதவ முடியுமானால் உதவ வேண்டியதுதான். ஆனால் அது பேச்சுவார்த்தை அளவில்தான் இருக்க முடியும் ராணுவ ரீதியாக இருக்க முடியாது.

இலங்கைப் பிரதமர் சந்திரிகா உறுதியளித்திருக்கிற சமஷ்டி அமைப்பிற்குரிய உரிமைகள், தமிழர் பகுதிக்குக் கிடைக்க வேண்டும். இதற்கு இந்தியா முனைய வேண்டும் என்று சொன்னால் நான் நிச்சயம் ஒப்புக் கொள்கிறேன். இந்தியாவிற்கு இதில் கடமையிருக்கிறது. இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், இந்தப் பிரச்சினையில் இந்தியா மும்முரமாக இறங்கும் அளவுக்கு, உங்கள் மக்கள் இந்தியாவை வைக்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. ●

# புகலிடத் துரோகம்

வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களை சொல்லொண்ணாத் துயரங்களில் இழுத்துவிட்டு, ஆயுதரீதியிலும், அரசியல் ரீதியிலும் பலவீனமாகிப் போயுள்ள புலிகள், தமது தோல்விகளை மறைக்க வெளிநாடுகளில் புகலிடத் 'தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பலவித பொய்ப்பிரச்சாரங்களையும், தமது விவேகமற்ற வீரம்பற்றிய மாயாஜாலக் காட்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தவகையில் அண்மைக் காலங்களில் 'அரசுடன் சேர்ந்து நிற்கும் துரோகக் குழுக்களே தமது தற்காலிக தோல்விக்குக் காரணம்' என்று கூறிவரும் புலிகள், ஏனையோர் மீது சேற்றை வாரி இறைப்பதன் மூலம் தமது இழப்புக்களை, தோல்விகளை, பலவீனங்களை மறைத்து வருகின்றனர்.

மனநோயாளிகளின் வைத்திய சாலைக்குப் போகும் பார்வையாளர்களைப் பார்த்து 'அதோ ஒரு மனநோயாளி வருகின்றார்' என்று மனநோயாளிகள் தமக்குள் பேசிக் கொள்வார்களாம்.

அதேபோல் துரோகத்தனத்தின் மொத்த உருவமான புலிகள் மற்றவர்களைப் பார்த்து துரோகிகள் என்று கூறிவருவது விந்தையிலும் விந்தை.

## பத்திரிகைத் துரோகம்

இவர்களின் இத் துரோகப் பிரச்சாரத்தை வெளிநாடுகளில் வெளிவரும் புலிசார் பத்திரிகை ஆசிரியர்களும், புத்திஜீவிகளும் இன்னும் மிகைப்படுத்தி மக்களுக்கு வழங்கும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பத்திராதிபர்களுக்கும், புத்திஜீவிகளுக்கும் யார் துரோகி என்பது தெரிந்திருந்தாலும், அதனைப் பாறாங்கல் போட்டு முழுங்கி மூடிவிட்டு, பிரபல்யமாதல், உய்வடைதல், உயிர்வாழ்தல் என்னும் நெறிகளுக்கு வேண்டி பொய்மையை உண்மையாக்கி எழுதிவரும் மாஜிக் விற்பன்னர்கள் ஆகின்றனர்.

இவர்களது விசேட குணாம்சம் என்னவெனில், இவர்கள் வாழும் பிரதேசப் புலிப் பொறுப்பாளர்கள் இவர்களுடன் முரண்பட்டு, 'இவர்கள் எங்களுடன் இல்லை' என்று ஒதுக்கி வைத்தாலும், இவர்கள் ஒதுங்குவதில்லை. 'பிரதேசப் புலிகளுடன் நாம் உடன்பாடு இல்லை, ஆனால் தாயகப் புலிகளுடன் உடன்படுகிறோம்' என்று கூறி வருவதேயாகும்.

ஆக, இவர்கள் தமது வயிற்றுப் பிழைப்புக்காக மக்களை மந்தைகள் என நினைத்து எழுதி வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை. வடக்கு கிழக்கில் புலிகள் இல்லை என்று ஆனாலும்கூட 'அங்கு எதுவும் நடக்கவில்லை. இதெல்லாம் பொய்' என்று கூறி, இன்னும் பத்து வருடங்களுக்கு அங்கு புலிகள் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் காட்டி-தேசிய வெறியை ஊட்டிப் பணம் பறிக்கத் தெரிந்த மலை விழுங்கிகள் இவர்கள்.

## வாய்ப்பேச்சுத் துரோகம்

புகலிடத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் மிக மிக அருகிவருகிறது. மிகவும் குறைவான பகுதியினரே வாசிப்பவர்களாக இருக்கின்ற போதும், இவர்களில் அறிவுவளர்ச்சி வேண்டி, உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டி வாசிப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும்.

இந்த விரல்விட்டு எண்ணக்கூடியவர்களோ எந்த ஒரு பொதுவிடயத்தின் கீழும் ஒன்றுபடாதவர்களாய் நவக்கிரகங்களாகத் திகழ்கின்றனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம் ☞

படிப்பகம்

# புகலிடத் துரோகம்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

இதை விடுத்து சாகசக் கவர்ச்சிகளை அறிய வாசிப்பவர்களே அதிகம். இவர்களின் கைநாடி தெரிந்த பத்திரிகைகள் இராணுவத் தாக்குதல்களையும், புலிகளின் மேம்பாடுகளையும் தலையங்கமாக்கி வருகின்றனர்.

புலிசார் பத்திரிகைகளையும், புலிப் பத்திரிகைகளையும் வாசித்து வரும் இந்த அறிவுஜீவிகள் வேறெந்தப் பத்திரிகைகளையும் வாசிப்பதில்லை என்று விரதம் அனுஷ்டித்து வருகின்றனர்.

நாம் தெரிந்து கொண்டதே உண்மை மற்றதெல்லாம் பொய் என்னும் தேற்றத்தை நிறுவியுள்ள இவர்கள், தாம் வாசித்ததை இன்னும் சற்று அதிகமாக்கி, வாசனையில் நாட்டமற்ற கேட்போர் கூட்டத்துக்கு கூறிவருகின்றனர்.

இந்தக் கேட்போர் கூட்டம் இவற்றைக் கேட்டு, பின்பு தாமும் சிறிது சேர்த்து, தாம் பார்க்கும் சாகச சினிமாக்களை மனதில் பதித்துக் கொண்டு, தாம் பொய்ப் பிரச்சாரம் செய்கிறோம் என்பதனை அறியாதவர்களாக வதந்திகளை, பொய்களை தூவி வருகின்றனர்.

ஆக, மேற்குறிப்பிட்ட விதத்தில் புகலிட தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புலிகள் மாவீரர்கள் என்றும் ஏனைய அனைவரும் துரோகிகள் என்றும் தூவப்பட்ட வித்து முளைத்து இன்று விருட்சமாக நிற்கிறது.

## விடுதலைக்கு வழி..?

பௌத்த சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தமிழ் பேசும் மக்கள் நமது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என ஆயுதம் ஏந்திப் புறப்பட்டு, இன்று தேசிய விடுதலையைப் போர்த்தி இருக்கும் – இன வெறியை ஆயுதமாகக் கொண்டிருக்கும் புலி என்னும் பாசிசக் கொடுங்கோன்மைக்கு ஆளாகி நிற்கின்றனர்.

புலிப் பாசிசத்திலிருந்து விடுபட்டால்தான் பௌத்த சிங்களப் பேரினவாதத்திடமிருந்து உரிமைகளைப் பெறுவது பற்றி நினைத்துப் பார்க்க முடியும் என்ற நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் புலிகளின் ஆயுதங்களின் முன்னால் வாய்மூடி மௌனமாகி நிற்கின்றனர். புகலிடத் தமிழ் பேசும் மக்களோ உண்மை நிலையைப் பகுத்தறிந்து பங்காற்றும் வரலாற்றுக் கடமையை தீண்டாதவர்களாக அறிவு மழுங்கி வருகின்றனர்.

இவர்கள் வாழ்வதோ நாகரீக மடைந்த, விஞ்ஞான வளர்ச்சிபெற்ற நாடுகள். இங்கு செய்தித் தொடர்பு சாதனங்களும், கல்விக் களஞ்சியங்களும் கொட்டிக் கிடக்கின்றன. ஜனநாயகம் என்றால் என்ன? மனிதநேயம் என்றால் என்ன? நாம் ஏன் ஆயுதச் சர்வாதிகாரத்தை எதிர்க்க வேண்டும் என்று தினசரி பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள் முழங்கிய வண்ணமிருக்கின்றன. இவற்றில் எதையும் காதில் போட்டு மனதில் இரைமீட்க இவர்கள் மறுப்பதேன்?

தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலை வேண்டும். அது மனித உரிமைகள் கொண்ட மானுடத்தை அங்கீகரிக்கின்ற, ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்கின்ற விடுதலையாக வேண்டும். அது கிடைக்க வேண்டுமாயின் தமிழ்பேசும் மக்களின் பேச்சுரிமை எழுத்துரிமையை மறுக்கும், மானிடத்தை குழிதோண்டிப் புதைக்கும், ஜனநாயகத்தை கண்டு பயப்படும் புலிகளிடமிருந்து விடுதலை வேண்டும்.

இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள புகலிடத் தமிழ் பேசும் மக்கள் தமது கண்களைத் திறக்க வேண்டும். உலகியல் ஒப்பீட்டில் நாம் எங்கு நிற்கிறோம்? மானுட நேயமே மனித நாகரீகத்தில் உயர்ந்தது என்று உலகம் அதனை நோக்கிப் படைஎடுக்கும்போது நாம் ஏன் அர்த்தமற்ற மனிதப் படுகொலைகளை நியாயப்படுத்த வேண்டும்?.... போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும். உண்மையையும் நேர்மையையும் உள்மனதில் நிறுத்தி நியாயங்களின் பக்கம் நமது கைகள் உயர வேண்டும்.

நமது விடுதலை நமது கைகளிலே இருக்கிறது. நமது தாயகத்தை வளமாக்கும் பொறுப்பு நமது தலைகளிலே சுமத்தப்பட்டிருக்கிறது. கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் வெண்ணெய்க்கு அலைந்தவர்போல் நாம் அறியாமையில் மூழ்கிக் கிடப்பது, எமது எதிர்கால சந்ததிக்கு விட்டுச் செல்லும் நீங்கா வடுக்களாகும். ‘மற்றவர்கள் துரோகிகள்' என்னும் போது நாம் எமது பங்குக்கு என்ன செய்தோம் என்பதனையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் எதனையும் செய்யாமல் இருப்பது, நமது சுயநலத்தோடு உறங்கிப்போவது பிழையான திசை வழிக்கு நமது வாழ்வுப்பாதை போக நாமே ஒத்துழைப்பதாகும். இதனால் பொதுநலம் கறைபட்டுப்போக நாம் வழிவகுக்கிறோம்.


புகலிடத் தமிழ் பேசும் மக்கள் கண் திறக்காதவரை தாயகத் தமிழ் மக்களுக்கு விடுதலை இல்லை.

புகலிடத் தமிழ் பேசும் மக்கள் உண்மை நிலையை அறிந்து, தமிழ் பயங்கரவாதத்துக்கு எதிராக கைகளை உயர்த்தாதவரை தாயகத் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலை இல்லை.

தாயகத்தையும், தாய் தந்தையரையும் மனதிலிருந்து அழித்து விட்டு சுயநலத்துடன் புகலிட சாகசக் கலாச்சாரங்களில் நாம் மூழ்கிக் கிடப்போமாயின் அது நமது புகலிடத் துரோகமாகும்.

உலக மக்கள் அரங்கில் தமிழ் பேசும் மக்களும் நாகரீக மக்கள் என்பதனை உணர்த்த நமது அறிவை ஆழ அகலப்படுத்துவோம். உண்மை நிலை அறிந்து நியாயங்களுக்கு குரல்கொடுத்து மனித நேயம் கொண்ட புதிய சிந்தனைகளை வருங்கால இளைய சந்ததிக்கு புகட்டுவோம்.

**– சாரதி, ஜெர்மனி**




## பாலத்திலிருந்த கிழவன்

எர்னஸ்ட் ஹெமிங்வே

தமிழில்: எம். யுவன்

கம்பி வளையங்களால் செய்த மூக்குக் கண்ணாடியுடன் மிகவும் தூசி படிந்த உடைகளுடன் சாலையோரமாய் உட்கார்ந்திருந்தான் அந்தக் கிழவன். அங்கிருந்த மிதவைப் பாலத்தைக் கடந்து வண்டிகளும், ட்ரக்குகளும், ஆண், பெண், குழந்தைகளும் சென்றுகொண்டிருந்தனர். கோவேறு கழுதைகள் இழுத்த வண்டிகள் பாலத்திலிருந்து கரைக்கு தட்டுத் தடுமாறி ஏறின. சிப்பாய்கள் சக்கரங்களின் ஆரங்களைத் தள்ளி உந்தி உதவினர். ட்ரக்குகள் புழுதியில் பதிந்து பின் மீண்டேறின. குடியானவர்கள் கணுக்காலளவு புழுதியில் நிதானமாக முன்னேறினர். ஆனால் அந்தக் கிழவன் நகராது அங்கு அமர்ந்திருந்தான். மேற்கொண்டு போகமுடியாதவாறு களைத்திருந்தான் அவன்.

பாலத்தைக் கடந்து அப்பாலிருந்த தாக்குகளத்தை ஆராய்வதும், எதிரி எந்த இடம்வரை முன்னேறியிருக்கிறான் என்று கண்டறிவதும் என் வேலை. இதை முடித்துவிட்டு பாலத்துக்குத் திரும்பினேன். இப்போது வண்டிகள் அதிகம் இல்லை. பாதசாரிகளும் மிகக் குறைவு. ஆனாலும் அந்தக் கிழவன் இன்னும் அங்கேயே இருந்தான்.

நான் அவனை கேட்டேன்.

“எங்கிருந்து வருகிறீர்கள்?”

“ஸான் கார்லோஸிலிருந்து” என்று சொல்லிவிட்டு புன்னகை செய்தான்.

அது அவனுடைய சொந்த ஊர் என்பதால் அதை உச்சரிப்பது சந்தோஷமாயிருந்தது அவனுக்கு, புன்னகை செய்தான்.

“நான் சில பிராணிகளை வளர்த்து வந்தேன்”

“அப்படியா” என்றேன் முழுக்கப் புரியாதவனாக.

“ஆமாம் பிராணிகளை வளர்த்துக் கொண்டுதான் தங்கியிருந்தேன். ஸான்கார்லோஸ் ஊரைவிட்டு வெளியேறின கடைசி ஆள் நான்தான்”.

அவனைப் பார்க்க ஆடுமேய்ப்பவன்போலவோ மாடுமேய்ப்பவன் போலவோ தோன்றவில்லை. தூசிபடிந்த அவனுடைய கறுப்புத் துணிகளை சாம்பல்நிற முகத்தை கம்பி வளையக் கண்ணாடியை பார்த்தேன்.

“என்ன வகையான பிராணிகள்?”

“வித விதமாய். அவற்றை விட்டுவிட்டு வரநேர்ந்தது எனக்கு” அவன் தலையை சிலிர்த்துக் கொண்டான்.

நான் பாலத்தை அவதானித்துக் கொண்டிருந்தேன். ஆப்பிரிக்க தேசம் போன்ற எப்ரோடெல்ட்டாவை, எதிரியை நாங்கள் எதிர்கொள்ள இன்னும் எவ்வளவு காலம் ஆகுமோ என்ற மலைப்பு. ‘சந்திப்பு' என்று அழைக்கப்படும் நிரந்தர மர்மம் செறிந்த சம்பவத்தைச் சுட்டும் முதல் ஓசைகளுக்காக கவனித்துக் கொண்டிருந்தபோது அவன் இன்னமும் அங்கு அமர்ந்திருந்தான்.

“என்ன வகையான பிராணிகள்?”

“மொத்தமாய் மூன்று இருந்தன” அவன் விளக்கினான். “இரண்டு ஆடுகள், ஒரு பூனை மற்றும் நாலு ஜோடி புறாக்கள்”.

### எர்னஸ்ட் ஹெமிங்வே

1899 இல் இல்லினாய்ஸில் (அமெரிக்கா) பிறந்தார். பத்திரிகையாளராகவும், முதல்உலகயுத்தத்தில் ஆம்புலன்ஸ் சாரதி மற்றும் சிப்பாயாக பணிபுரிந்தவர். ஸ்பானிய உள்நாட்டு யுத்தச் செய்தியாளராகப் பணியாற்றினார். சிக்கனமான வார்த்தைகளில் நுட்பமான உலகத்தை, உணர்வுச் சுழற்சி மிகுந்த ஆனால் ஆர்ப்பரிப்பற்ற நடையில் சித்தரித்துக் கதை சொல்பவர். 1954ம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு பெற்றவர். 1961இல் இறந்தார்.

“அவற்றை விட்டுவிட்டு வரவேண்டியிருந்ததாக்கும்?”

“ஆமாம் பீரங்கிப் படையால்தான். பீரங்கிப் படைக்காக அதன் கேப்டன் என்னை வெளியேறச் சொன்னான்”.

பாலத்தின் மறுகோடியில் கடைசியாக சில வண்டிகள் கரையின் சரிவில் விரைவதைப் பார்த்தபடி கேட்டேன்.

“குடும்பம் என்று ஒன்றும் இல்லையா உங்களுக்கு?”

“இல்லை நான் சொன்ன பிராணிகள் மட்டும்தான். பூனை, அதைப்பற்றிப் பிரச்சினையில்லை. ஒரு பூனைக்கு தன்னை பார்த்துக் கொள்ளத் தெரியும். ஆனால் மற்றதுகளுக்குத்தான் என்ன ஆகும். என்று என்னால் நினைத்தே பார்க்க முடியவில்லை”.

“அரசியல் சார்பு எதுவும் உண்டா?”

“எனக்கு அரசியல் எதுவும் கிடையாது. எழுபத்தாறு வயது ஆகிறது. பன்னிரெண்டு கிலோமீற்றர் நடந்து வந்திருக்கிறேன். இதற்குமேல் நடக்க முடியாது என்று தோன்றுகின்றது”.

“பின், தங்க உசிதமான இடமில்லை இது. கொஞ்சம் கஷ்டப்பட்டு நடந்து விட்டாலும், மேலே டார்ட்டோஸாவுக்குப் பிரிகிற சாலையில் ட்ரக்குகள் போகும்”.

“கொஞ்சநேரம் இருந்து விட்டு பிறகு போகிறேன். அந்த ட்ரக்குகள் எதை நோக்கிப் போகும்?”

“பாரிஸிலோனாவுக்கு”

“அந்த வழியில் எனக்கு தெரிந்தவர் யாருமில்லை. என்றாலும் உங்களுக்கு என் நன்றி மிகுந்த நன்றி”.

களைத்த வெற்றுப் பார்வையுடன் என்னைப் பார்த்தான். அவனுடைய கவலையை யாருடனாவது பகிர்ந்து கொள்ள விரும்பியது போல என்னிடம் சொன்னான்.

“பூனையை பற்றிக் கவலையில்லை. எனக்கு உறுதியாய் தெரியும், அதைப் பற்றி அமைதியிழக்க வேண்டியதில்லை. ஆனால் மற்றவை..... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அவற்றைப் பற்றி?”

“ஏன் அவைகளும் நல்லபடியாய் சமாளித்திருக்கக் கூடுமே”

“அப்படியா நினைக்கிறீர்கள்?”

“பின்னே?” என்றபடியே தொலைவிலிருந்த கரையைப் பார்த்தேன். அங்கே வண்டிகள் எதுவும் இல்லை.

“ஆனால், பீரங்கிப் படைகளால் நான் வெளியேற்றப்பட்ட பின்பு, பீரங்கிப் படைகள் இருக்கும் இடத்தில் அவை என்ன செய்ய முடியும்?”

“புறாக்கூண்டை பூட்டாமல் தானே விட்டீர்கள்?”

“ஆமாம்”

“அப்படியானால் அவை பறந்துவிடும்”

“ஆமாம் நிச்சயம் பறந்துவிடும். ஆனால் .மற்றவை?.... அவற்றைப் பற்றி நினைக்காமலிருப்பதே நல்லது”.

“நீங்கள் ஒய்வெடுத்து முடித்தாயிற்றென்றால் போகலாம்” நான் அழுத்திச் சொன்னேன்.

“எழுங்கள். நடக்க முயற்சி செய்யுங்கள்”.

“நன்றி” என்றபடி எழுந்தான். பக்கவாட்டில் ஊசலாடினான். பிறகு தூசியில் உட்கார்ந்து விட்டான் மறுபடியும்.

“நான் சில பிராணிகளை வளர்த்து வந்தேன்” இதை மந்தமாக்ச் சொன்னான். ஆனால் என்னிடமல்ல.

“நான் பிராணிகளை வளர்ப்பது மட்டுமே செய்து வந்தேன்”.

அவனுக்குச் செய்யக்கூடியது எதுவுமில்லை. அது ஈஸ்டர் ஞாயிறு. படைகள் எப்ரோவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். சாம்பல்நிற மேகங்கள் அடர்ந்த நாள். மேகங்கள் தாழ இருந்ததால் அவர்களுடைய விமானங்கள் தட்டுப்படாததும், பூனைகளுக்கு தங்களைப் பார்த்துக் கொள்ளத் தெரியும் என்பதுவும் மட்டுமே அந்தக் கிழவனுக்கு வாய்க்க முடிந்த பேரதிர்ஷ்டங்கள்.




எமது நாடானது சமாதானத்திற்காக உழைக்கவோ, பேச்சுவார்த்தைகள் மூலம் வேறுபாடுகளை களைவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபடவோ எந்த வேளையிலும் மறுக்காது.

மேலும், எமது நாடானது எமது பகுதியிலும் உலகிலும் நிலவுகின்ற பதட்ட நிலையை இல்லாமற் செய்வதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவும் மறுக்காது.

நமக்கு அமைதி தேவைப்படுகின்றது. அமைதியென்றால் நமது மக்களுக்கு ஒரு பாதுகாப்பான ஒளிமயமான எதிர்காலம் என்பதேயாகும்.

மனித இனத்தின் வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்குமான போராட்டமானது சகல மக்களினதும் அவர்களின் தேசத் தலைவர்களினதும் தவிர்க்க முடியாத கடமையென நாம் கருதுகின்றோம்.

– 01.01.1984 ஃபிடல் காஸ்ட்ரோ உரையிலிருந்து....

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



குமாரபுரம் படுகொலை

# மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு என்னதான் இருக்கிறது?



கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் மூதூரில் நடைபெற்ற கிராமவாசிகள் படுகொலை இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாடு, ஒழுக்கம் பற்றி அரசு செய்துவரும் பிரச்சாரத்தின் மீது தீவிரமான கேள்விகளை எழுப்புகிறது.

அரச பயங்கரவாதத்திற்கு-மிகப் பச்சையான, வெளிப்படையான, மிகப் பிந்திய எடுத்துக்காட்டு மூதூர் படுகொலைகளாகும்.

கடந்த 17 வருடங்களாக இலங்கையின் இராணுவமானது பேரினவாதம் என்னும் கோட்பாட்டின் மீதே கட்டியெழுப்பப்பட்டு வந்தது. இதனைப் பற்றி தீவிரமான மறுபரிசீலனை இல்லாமல், மறுசீரமைப்பு இல்லாமல் தட்டிக் கொடுப்புக்கள் நடந்து வருகின்றன.

அவர்கள் நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பதற்காக உயிரைத் தியாகம் செய்கிறார்கள் என்ற ஒரு கருத்து அரசினாலும் பேரினவாத சக்திகளாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுகிறார்கள் என்ற கருத்தில் எப்படி ஒரு பொருத்தமின்மை காணப்படுகிறதோ, அதே போலத்தான் இராணுவம் நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கிறது என்பதிலும் பொருளெதுவுமில்லை.

இரண்டு இராணுவத்தினரை புலிகள் கொன்றுவிட்டார்கள் என்பதற்காக, கிராமவாசிகளை வீடு புகுந்து கொலைவெறியாடி வீதியெங்கும் பிணங்களைக் குவிப்பவர்களை எவ்வாறு நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பவர்களாகக் கருதமுடியும்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பயங்கரவாதம் விஸ்வருபமெடுப்பதற்கு வித்திட்டது அரச பயங்கரவாத நடவடிக்கைகளே. இதனை யாரும் மூடிமறைத்துவிட முடியாது.

சிந்திக்க வேண்டிய கேள்விகள் சில.... கிளிவெட்டிக் கிராமத்தில் எஞ்சியோரும், அதன் சுற்றாடல் கிராமவாசிகளும் தற்போது யாரை நம்புவார்கள்? குஞ்சு குழந்தைகள், பெண்கள் எனப் படுகொலை செய்யப்படும்பொழுது, அங்குள்ள எஞ்சிய சின்னஞ்சிறுசுகள் எதனை நோக்கி நிர்ப்பந்திக்கப்படுகின்றன? எதனை நோக்கி தள்ளப்படுகின்றன?

அரசாங்கம் தமக்குப் பாதுகாப்பு வழங்கும் என நம்புவதற்கு என்ன நியாயங்கள் இருக்கப் போகின்றன?

அப்பாவிச் சிங்களக் கிராமவாசிகள் மீது புலிகள் நடாத்தும் பயங்கரவாத தாக்குதலை - விதிவிலக்காக சில இனவாதக் கட்சிகளைத் தவிர- சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மனிதாபிமான ஜனநாயக உணர்வு கொண்ட சகல கட்சிகளும் கண்டித்திருக்கின்றன.

இத்தகைய கொலைகளின் பின்னர் பாதிக்கப்பட்ட கிராமவாசிகளுக்கு, பாதுகாப்பிற்கென ஊர் காவல் படைகள் அமைக்கப்பட்டு ஆயுதங்களும் வழங்கப்படுகின்றன.

அரச மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களில் விரிவான அளவில் இப் படுகொலைகள் விபரிக்கப்படுகின்றன.

ஆனால், மூதூரில் அப்பாவித் தமிழ் கிராமவாசிகள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட போது, இந்த ரூபவாகினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எல்லாம் ஊமைகளாகிவிட்டன. 2 நாள் கழித்து, மூதூர் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இங்குதான் 'பல இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு' என்ற பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கருத்தும் வெறும் வார்த்தையளவில்தானோ என்ற சந்தேகத்துக்குரியதாகிவிடுகிறது. இராணுவம் கிராமத்தினுள் புகுந்து வெறியாட்டம்நடாத்தியது என்பதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள அரசு தயங்கினால், இராணுவம் தொடர்ந்து என்ன செய்யும் என்பதனை நாம் சொல்லத் தேவையில்லை.

கொடுமைகளைக் கண்டு மௌனமாக இருப்பது, அந்தக் கொடுமையை மேற்கொண்டவர்களது செயலைவிடக் கொடுமையானது. அத்தகைய கொடுமை மூதூர் சம்பவத்திலும் நடந்து போயிற்று.

உலகில் எந்த ஒரு அரசினதும் கடமை, தனது நாட்டு மக்களைப் பாதுகாப்பது. ஆனால் வடகிழக்கில் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பது பொது மக்களின் பாதுகாப்பல்ல. அங்கு நிலைகொண்டிருக்கும் படையினரின் பாதுகாப்பு!

இன்று கிழக்கு மாகாணத்தின் கிராமங்களின் துயரம், சிலிங்கோ-மத்தியவங்கியில் நடந்த சம்பவங்களில் ஏற்பட்ட சோகங்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவையில்லை.

நாளாந்தம் யுத்தக் கெடுபிடிகளால் இறந்து கொண்டிருக்கும் கிராமவாசிகள் பற்றி அந்தளவிற்கு யாரும் கருத்திற்கெடுப்பதில்லை.

முகத்தில் அறைந்தது போல் சில சம்பவங்கள் நடக்கும்போது தான், நிலமையின் பாரதூரமும் அவலமும் இவர்களுக்குப் புரிகிறதே தவிர, நாளாந்தம் வட-கிழக்கில், எல்லைச் சிங்களக் கிராமங்களில் நடைபெறும் சம்பவங்கள் அந்தளவுக்கு உறைப்பதில்லை.

வட-கிழக்கில் மீன்பிடி முற்று முழுதாக ஸ்தம்பித்து எவ்வளவோ காலமாயிற்று. தற்போது வட-கிழக்கின் முழுப் பொருளாதாரமுமே ஸ்தம்பித்த நிலை. சூரியக்கதிர் நடவடிக்கையின் பின்னர் யாழ்ப்பாணத்தின் பொருளாதார செயற்பாடுகள் அறவே நின்றுவிட்டன.

பிரமாண்டமான அகதிகள் பிரச்சினை, கடும்வரட்சி, உற்பத்தி முயற்சிகளுக்கான ஆதாரங்கள் அற்ற நிலை வடபகுதிப் பொருளாதாரத்தை படுகுழியில் வீழ்த்தியுள்ளது.

கிழக்கில் சூரியக் கிரணத்தைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்வதும், யுத்த வலயங்கள் உருவாகி இருப்பதால் உற்பத்தியான நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

இந்த அவலப்படும் மக்களை விட, இராணுவ முதன்மை நிலையை அரசும், புலிகளும் மேற்கொண்டுள்ளார்கள். இந்தக் கட்டத்தில் மக்கள் எந்த முக்கியத்துவமும் அற்றுப் போய்விட்டார்கள்.

இராணுவத்தின் மீதான தங்கி நிற்றல், தகவல் தொடர்புச் சாதனங்களில் நடைபெறும் அளவுக்கு மீறிய முக்கியத்துவம், அலுத்துப் போகுமளவிற்கு அவை தொடர்பான பாடல்கள் எல்லாமே போர் இயந்திரம் இந்த நாட்டின் பெறுமதி வாய்ந்த அனைத்துவிடயங்களையும் விட முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டதையே கோடிகாட்டுகிறது.

அழகான அறிக்கைகளும், பேச்சுக்களும் நடைமுறைக்கொவ்வாத ஏட்டுச்சுரைக்காய்களாகிவிட்டன. மனித உரிமை, நீதி விசாரணைக் கமிஷன்கள் கூடச் சலிப்படையச் செய்கின்றன. இவற்றின் எண்ணிக்கை அதிகரித்தளவிற்கு நடைமுறை விளைவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

எல்லைக் கிராமவாசிகள் படுகொலையைப்போல மூதூர் கிராமவாசிகள் படுகொலையும் மறைக்கப்பட்ட படுகொலைகளாகிவிடக் கூடாது என்பதே மனித உரிமை-ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்ட எல்லா மனிதர்களதும் விருப்பமுமாகும்.

**- உள்ளமுறுத்துரையர்**

---

## மகஸீன் சிறையில்

## வேலி பயிரைத் தின்றது

எவ்வளவுதான் மனித உரிமைகளைப் பற்றி உரக்கப் பேசினாலும் சிறைகளிலும் கிராமங்களிலும் இனரீதியான தாக்குதல்கள் ஓய்ந்தபாடில்லை.

1983 யூலை சிறைப் படுகொலைகளின் பின்னர் 1996 இல் அதனை ஞாபகமூட்டும் சம்பவங்கள் கொழும்பில் உள்ள முக்கிய சிறைச்சாலையில் நடைபெறுகிறது. கடமையில் இல்லாத சிறைக் காவலர்களால் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இச் சம்பவங்கள் இலங்கையின் சட்டம் ஒழுங்குத் துறைகளில் எவ்வளவு சீர்கேடுகள் உள்ளன என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி சிறைகளில் வாழ்பவர்களின் கதி இது என்றால் பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் நிலை எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

உலக அரங்கில் இந்த நாடு கௌரவமாக நடாத்தப்படவேண்டும் என்று எமது அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் கேவலம் தலைநகரில் அமைந்துள்ள மிக முக்கிய பிரபலமான சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளைக் கூட பாதுகாக்க முடியவில்லை என நினைக்கும்போது பிறகு எதனைத்தான் எதிர்பார்க்கமுடியும்.

நவீன உலகில் அரசியல் கைதிகளின் உரிமைகள் பற்றிய கருத்துக்கள் வலுவடைந்துவரும் வேளையில் காட்டுமிராண்டிக் காலத்தின் காவலர்களைக் கொண்டதாக இலங்கைச் சிறைச்சாலைகள் இருப்பதுதான் விசனத்தைத் தருகிறது. ஒருமுறை சிறைப்படுகொலை நடந்தபோது முழு உலகமுமே அதிர்ச்சி அடைந்தது. ஆனால் இலங்கைச் சிறைச்சாலைகளின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அது வழமையான நடைமுறைகளில் ஒன்றாகிவிடுகிறது. இப்படித்தான் அனேகமான விடயங்கள்.

சிறைச்சாலைகளில் தாக்குதல்கள் நடாத்தப்படும்போது சட்டங்கள், நீதித்துறை மீதான நம்பிக்கைகள் தகர்ந்து போகின்றன.

மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் இதயசுத்தியான அக்கறை இருக்குமேயானால் சிறைத் தாக்குதலை நடாத்தியவர்கள் சீக்கிரம் தண்டனையை அனுபவிப்பதற்கான நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சட்டம் நீதி பற்றிய அக்கறைகளைத் தக்கவைக்க முடியும்.

---

## அதிகாரப் பகிர்வு.... (9ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மக்களுக்கு ஏற்கனவே கிடைத்த உரிமைகளும் கூட இழந்ததாக்வே பொருள்படும். அப்படியான ஓர் முடிவை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதும் முடியாத காரியமாகிவிடும். எனவே இனப்பிரச்சினை தீர்வு முழுமை பெற வேண்டுமாயின் வட-கிழக்கு நிரந்தரமாக இணைந்த அதிகார அலகொன்றை சிங்களக் கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கை பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய பல மதங்களைக் கொண்ட நாடு. பல மதங்களையும பல இனங்களையும் சேர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கம் சகல மக்களையும் சமத்துவமாக நடாத்த வேண்டும்; இல்லையேல் ஓர் மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும். ஆனால் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்து அதனை அரச மதமாகப் பிரகடனம் செய்யும் போக்கே உள்ளது. இதன் பிரகாரம் ஏனைய மதங்கள் இரண்டாம் பட்சமானவையே. இதுவும் கூட வெவ்வேறு மதப் பிரிவினரிடையே அநாவசியமான சந்தேகங்களை வளர்க்கவே உதவும்.

இவைதவிர, புதிய அரசியல் வரைபு இன்னும் இரண்டு விடயங்களைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றது. அதாவது, "எந்த ஒரு பிராந்திய சபையும் தனது பெயரை மாற்றிக் கொள்ள முடியாது" என்பது ஒன்று. மற்றது "இரண்டு சபைகளோ அல்லது அவற்றின் பகுதிகளோ அவர்கள் விரும்பினாலும் இணைக்கப்பட முடியாது" என்பது. வட-கிழக்கு இணையக் கூடாது என்பதை மனதில் கொண்டே இச்சரத்தும் இணைக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்த மாகாண சபைகள் சட்ட மூலத்தின் பிரகாரம் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சபைகளோ விரும்பின் இணைய முடியும் என்ற நிலையும் இதன் மூலம் மாற்றப்பட்டுள்ளது.

இதனைப்போன்றே மாகாணங்களோ, பிராந்தியங்களோ தாம் விரும்பும் பட்சத்தில் அதற்கான பெயரை மாற்றி அமைத்துக் கொள்ளவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தென்பிராந்தியசபை "றுகுணு சபை" எனவோ, வட-கிழக்கு மாகாணசபை "ஈழம் சபை" எனவோ பெயர் மாற்றிக்கொள்ள முடியாது. இப்பெயர் விவகாரங்கள் மக்களுக்கு சோறு போடாவிட்டாலும், இது மக்களின் வரலாற்றுடன், பாரம்பரியம் பண்பாடுகளுடன் இரண்டறக் கலந்த விடயங்கள். இவற்றுக்கு தடைவிதிப்பதென்பது அவர்களின் உணர்வுகள், விருப்பங்களுக்கு தடை விதிப்பதாகும்.

அடுத்து, இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட அரசின் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி இங்கு எதுவுமே குறிப்பிடப்படவில்லை. சிங்களமக்கள் குடியேறுவதற்கு வளமான காணிகள் இல்லை என்பதற்காக இவர்கள் வடக்கு-கிழக்கில் குடியேற்றப்படவில்லை. மாறாக, வட-கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக இருப்பதை மாற்றி, அவர்களை சிறுபான்மையாக்க வேண்டும் என்பதற்காகவே இக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார்கள். சிங்களப் பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்த கிழக்கில் திருமலையிலும் அம்பாறையிலும் 4க்கு மேற்பட்ட சிங்களப் பிரதிநிதித்துவம் ஏற்படும் வகையிலும், அதேபோல் வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளிலும் இக்குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் விவசாயப் பிரதேசங்கள் பாரியளவில் சிங்கள பிரதேச சபைகளின் ஆளுமைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளன. அதுமாத்திரமல்லாமல் 1983க்கு பின்னர் வட-கிழக்கு நிலப்பரப்பின் தொடர்ச்சியைத் துண்டாடுவதற்காக மணல்ஆறு என்ற தமிழ் பிரதேசமும், அங்குள்ள தமிழ் மக்கள் விரட்டப்பட்டு சிங்கள மக்களின் குடியேற்றப் பூமியாகி உள்ளது. எனவே இப்படியான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக எதுவித முடிவும் எடுக்காமலேயே காணிப்பகிர்வு என்பது அம்மாவட்ட இன விகிதாசார அடிப்படையில் நடைபெற வேண்டும் என குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

அரசாங்கத்தின் அதிகாரப்பகிர்வு தொடர்பாக இன்று முன்வைக்கப்பட்டுள்ள நகல் அரசியல் வரைவிலுள்ள சில அடிப்படைக் குறைபாடுகளைப் பற்றி மாத்திரமே மேலெழுந்தவாரியாக இங்கே கூறப்பட்டுள்ளது. இன்னும் ஆழமாக ஒவ்வொன்றாகப் பார்த்தால் இன்னும் பல மாற்றங்கள் செய்ய வேண்டியதை இனம் காணலாம். இது தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எப். முழுமையான ஓர் ஆய்வினை மேற்கொண்டு, இதனை தெரிவுக்குழுவிற்கு அனுப்ப உள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்